1334

Reg. No. M. 1925. ANANDA VIJAYAN.

கடவுள் துணை.

ஆனந்தவிஜயன்

(தேசீய மாதாந்தப் பத்திரிகை.)

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவவானினும் நனிசிறந்தனவே.

(*All Rights Reserved.*)

OFFICE OF THE REGISTRAR ... 8-DEC ... MADRAS

தொகுதி.	1926-ஷு மே-செப்டெம்பர்-மீ	பகுதி.
3.	அக்ஷய-ஷு வைகாசி-புரட்டாசி.	5—9

பொருளடக்கம்.

இலக்கம்.		பக்கம்.
1	நமது பத்திரிகை.	106
2	அடுத்துவருந் தேர்தல்.	109
3	நீதிவாக்கியம்.	113
4	குழந்தை மணத்தின் கொடுமை.	114
5	விவசாயம்.	117
6	ஈரோடு நகரப்பரிபாலன சபையும் அதன் அழகிய சிங்கார வனமும் (பார்க்.)	120
7	ரசமஞ்சரி.	124
8	கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்கள்.	125
9	தொழிலாளரும் முதலாளிகளும்.	128
10	வெளிநாடுகளிலுள்ள இந்திய சகோதரர்கள்	130
11	தீண்டாமை ஒழிய.	132
12	ஆன்ம ஸ்வதந்தரம்.	138
13	பொது சமாச் சாரங்கள்.	141
14	பத்திராதிபர் குறிப்புகள்.	143
15	ஆனந்தவிஜயன் பரிசு.	விளம்பரப் பக்கம்.

பத்திராசிரியர்,
ச. தாமஸ் பாலையா பிள்ளை.

ஜீவிய சந்தா ரூ—25

ஆனந்தவிஜயன்.

போஷக சந்தா ரூ—5

ஓர் உயரிய தேசீய மாதப் பத்திரிகை.

	ரூ. அ. பை.
இந்தியா, பர்மா, சிலோன் (வருஷம் 1-க்கு தபாற் செலவு உட்பட)	1—8—0
சிங்கப்பூர் பினங், மோரீஸ், நெட்டால் போன்ற வெளிநாடுகளுக்குத் தபாற்கூலியுட்பட வருஷம் 1-க்கு	1-12—0
மாணவர் மாணவிகளுக்கு வருடம் 1-க்கு	1—0—0

தனிப்பிரதி 0—2—0

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

விசேட கவனிப்பு.

1. சந்தா நேயர்கள் தங்கள் விலாசம், பெயர், போஸ்ட் முதலியவைகளைத் திருத்தமாக எழுதியனுப்புதல் வேண்டும்.

2. எப்போதும் சந்தாத் தொகையை முன்பணமாக அனுப்பிப் பத்திரிகை பெருவதே சலாக்யமானது. வி. பி. வழியாக சந்தாத் தொகை வசூல் செய்வதால் அதிகம் 3 அணு செலவு நேரிடுகிறது.

3. பத்திரிகை எப்போதும் இங்கிலீஷ் மாதம் முதல் தேதியிலேயே அனுப்பப்படும். முதல் வாரத்துக்குள் கிடைக்காதவர்கள் நமக்கு எழுதவேண்டியது.

4. பத்திரிகைக்கு வியாசம் எழுத விரும்புவோர் பொதுஜன உபகாரமான வியாசங்களை, நல்ல கடிதாசியில், ஒரே பக்கத்தில் எழுதுதல் வேண்டும். வியாசங்களைப் பிரசுரிக்கவோ, நிராகரிக்கவோ, பத்திராதிபருக்குச் சுதந்தரமுண்டு. சிறந்த வியாசங்களுக்குச் சன்மானம் கொடுக்கப்படும்.

5. பத்திரிகைக்கான கடிதங்கள், வியாசங்கள், பணம் முதலியன கீழ்கண்ட விலாசதாரருக்கே அனுப்பவேண்டியது.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்துக்கு ஒரு தடவைக்கு	ரூ 10—0—0
3 மீங்களுக்கு மேற்பட்டால் பக்கத்துக்கு	ரூ 5—0—0

இப்படியே, அரைப் பக்கம், கால் பக்கத்துக்கு பிரித்துக் கொள்க.

சுதேச சாமான்கள், கத்தர் முதலியவற்றிக்கு இன்னும் குறைந்த விகிதம். மற்ற விபரங்களுக்கு எழுதவும்.

விலாசம்:— ச. தாமஸ்பாலையா பிள்ளை,
ஆனந்த விஜயன் காரியாலயம், ஈரோடு.

கடவுள் துணை.

ஆனந்தவிஜயன்.

ஈரோட்டினின்று

வெளியாகும் உயரிய மாதசஞ்சிகை.

(All Rights Reserved.)

தொகுதி.	1926-௵ மே-செப்டெம்பர்-௴	பகுதி.
3.	அக்ஷய-௵ வைகாசி-புரட்டாசி.	5—9

கடவுள் வணக்கம்.

நின்னையே தெய்வமென் றெண்ணிப் பணிந்திடும்
நிலையான பக்தி வேண்டும்
நினக்குமிக ராகவெப் பொருளையும் வினைந்திடா
நினைந்திடா தொழுகல் வேண்டும்
கொன்னே யுனின்பெயர் கூறியிடர் வீழாக்
குறிக்கொண்டு காத்தல் வேண்டும்
குவலய மெலாம்புகழ நின்தோய்வு நாளின்வரு
குறையாத தூய்மை வேண்டும்
அன்னை தந் தையர்கடமை யென்நாளு மேமதித்
தாதரித் துய்தல் வேண்டும்
அனைத்துயிர் வதைத்தய றனத்திடை மலைத்துல
கழிம்புசெய் யாமை வேண்டும்
தன்னுடைமை யல்லகவ ராமைவேண் டும்புலைச்
சான்றுபக ராமை வேண்டும்
தருதுய ரவாவொழிய வேண்டுமெனை யாட்கொண்ட
தருமசற் குருமூர்த்தியே.

வானமும் பூமியும் மகிழ்கொண் டோங்கிட
ஞானமும் நன்மையும் நனிசிறந்திட
ஊனமும் பாவமும் ஒழியத் தோன்றிய
தீனரக்ஷகன் பதஞ்சிந்தித் தேத்துவாம்.

நமது பத்திரிகை.

திருவுஞ் செல்வமுந்திகழ்ந்திலங்கி தமிழ்நாட்டின் மணிமகுடமென விளங்கும், ஈரோடு மாநகரினின்று இன்று "ஆனந்த விஜயன்" வெளிவருகின்றான். இதுவரையிலும் இவன், தான் தோன்றிய பாளையங்கோட்டைப் பதியினின்றும் வெளிவந்து கொண்டிருந்தானென்பது நேயர்களறிந்ததே. "ஆனந்தவிஜயன்" என்னும் இம்மாசிகை சென்ற 3 வருடங்களுக்கு முன்னர், பாளையங்கோட்டையில், தமிழ் தாயின் அருந்தவப்புதல்வராம், ஸ்ரீமான் டி. மாசிலாமணி நாடார் அவர்களின் அரியபிரயாசையால் தோற்றுவிக்கப் பெற்றது. இதுவெளிவந்த இத்துணைவருடங்களில் தமிழ்நாட்டிற்குச் செய்திருக்கும் உபகாரம் கொஞ்சமன்று.

ஓர் தேசமோ, குலமோ, மதமோ, கக்ஷியோ, மற்றும் இன்னோரன்ன பல விஷயங்கள் அபிவிருத்தியடைய வேண்டுமாயின் அவை பத்திரிகைகளினாலேயே ஆகக்கூடுமென்பது ஒருதலை. உலகில் முன்னேற்றமடைந்துள்ள எந்ததேசத்தை எடுத்துக் கொண்ட போதிலும் சரியே, பத்திரிகைகள் ஏராளமாயிருப்பதைக் காணலாம். மேனாட்டாரின் முன்னேற்றத்தைக் கண்டு கீழ்நாடாகிய ஜப்பானும் தன்தேசத்தை விருத்தியடையச் செய்ததற்குக் காரணம் பத்திரிகைகளினாலேயே. யோகோஹாமா, என்னும் நகரில் "ஆனந்த விஜயன்" போன்றமாசிகை "ஒஸகாமொய்னிச்சி" என்னும் பெயரால் வெளிவருகின்றது. இதற்கு சுமார் பத்து லக்ஷம் சந்தாதாரர் இருக்கின்றனராம். இதுமட்டுமல்ல, கிரேட் பிரிட்டன், அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், முதலிய பல நாடுகளை ஊன்றிக்கவனிப் போமாயின் அங்குள்ள பல தினசரிப் பத்திரிகைகளுக்கு 12 லக்ஷம், 20 லக்ஷம் சந்தாதாரர்கள் இருப்பதைக் காணலாம். மற்றும் ஒவ்வொரு துறைக்கும், அதாவது விவசாயம், வியாபாரம், கல்வி, சுகாதாரம், தொழில், மோட்டார், இயந்திர இயக்கம் போன்ற பலவிஷயங்களுக்கும் ஆயிரக்கணக்கான பத்திரிகைகள் உண்டு; அதனை ஆதரிக்கும் சந்தாதாரர்களும் பல்லாயிரக்கணக்கானவர்கள் உளர். அங்குகாரியம் இவ்விதமிருக்க, நமது நாட்டிலோ அநேகபத்திரிகைகள் தோன்றி ஆதரிப்பாரின்றி நின்றுவிட்டன. பத்திரிகாபிமானம் முற்றிலும் முழுமனதுடன் தோன்றினாலன்றி, இந்நாடு முன்னேற்றமடைவதோ, அன்றி சுயராஜ்யம் பெறுவதோ, அசாத்தியமான காரியமென்றே துணிந்து கூறுவோம்.

இந்நிலையில் "ஆனந்த விஜயன்" தோன்றி 3 வருடங்களாக தமிழ்நாட்டிற்கும், அதன்மக்களுக்கும் அரிய நன்மைகள் பல

புரிந்ததெனென்று கூறப்புகின், அதன் மகிமை இச்சஞ்சிகையின் ஆதரிப்பாளருக்கே முற்றிலும் உரிமைப்பாடுடையதாகும். நிற்க இச்சஞ்சிகையைத் தோற்றுவித்த பெரியார், ஸ்ரீமான் மாசிலாமணி நாடார் என்று முன்னர் கூறினோம். இன்னார் தமிழ்க்களஞ்சியம்; பரந்தநோக்கமும், சிறந்த குணங்களும், நிறைந்தகல்வியும், பூஷணமாகக் கொண்டவர். தனக்கெனவாழாப்பிறர்க்குரியாளன்; அநேக தமிழ்நூல்களை இயற்றியுள்ளார்; இத்தகையசீரியர், பாளையங்கோட்டையிலுள்ள சாராடக்கர் காலேஜ் என்னும் பெண்கல்லூரியில் பிரதம தமிழ் பண்டிதராக உத்தியோகம் வகித்துள்ளார். தனது பல உயரிய அலுவல்களின் மத்தியில் நாட்டிற்கும், பாஷைக்கும் தொண்டு செய்வான் வேண்டி, இம்மாசிகையையும் வெளியாக்கினர். எனினும், தனது பல அலுவல்களில் இதனையும் சேர்த்து சில வருடங்கள் நடத்தி வந்தார். இவ்வித பலகாரியங்களையும் சிரமேற் கொண்டமையான், இவ்வருடம் மேமீத்திலிருந்து சஞ்சிகையை வெளியிடக்கூடாது போயிற்று. பத்திரிகையை நிறுத்திவிடவும் மனம் சம்மதிக்கவில்லை. இங்ஙனம் ஊசலாடிக் கொண்டிருக்கும்போது, "இக்காரியத்தை எவரேனும் ஏற்றுச் செய்வாராயின் அன்னவருக்கு கையளித்து விடுவேன்" எனக்கூறலாயினர். நமக்கு இவ்விஷயத்தை எடுத்து நடத்த முற்றிலும் பிரியமே; என்றாலும் எமது நிலை அதனை இயக்குவிக்கக் கூடாதபடி இருந்தது. இதனை யாரிடம் சொல்ல? எல்லாம் வல்ல சாக்ஷத் எம்பெருமானிடம் சகல விஷயங்களையும் சொல்லலானோம். அவனோ பரந்தாமன்; தீனபந்து; அண்டினோரை ஆதரிக்கும் அருட்காரமுடையான்; ஆபத்பகவந்; அன்பர் சகாயன், இக்குணநிதிக்கடல்-இத்தியாதி பல குணங்களையுடையான்—"ஆனந்த விஜயன்" சஞ்சிகைக்கும், அதனை ஏற்று நடத்த முற்பட்டஎமக்கும் பெருந்துணை புரிவானாயினன்.

நாம் மனங்கலங்கிநிற்கும் வேளையில், நண்பர் சிலர் கை கொடுத்துதவ முன்வரலாயினர். இத்துடன் சந்தாநேயர்களின் ஆதரவும், போஷககர்த்தர்களின் அபிமானமும் ஒருங்கே எம் கண்முன் தோன்றிற்று. எனவே, இவ்விஷயத்தில் துணிவுகொண்டவணுகி, சஞ்சிகையை வெளியிட ஆரம்பித்தோம். இனி, நமது மாசிகை மாதந்தோறும் காலங்கடவாது தன் நேயர்களைக்கண்டு களிப்பூட்டுவானென்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

இதுவரையிலும், இச்சஞ்சிகையின்மீது அபிமானம் வைத்து ஆதரித்துவந்த சந்தாநேயர்களும், போஷககர்த்தாக்களும், இன்னும் பன்முறை ஊக்கங்கொண்டு எம்மை ஆதரிக்க முன்

வரும்படி விக்ஞாபனம் செய்கின்றோம். ஓர் பத்திரிகையை நடத்துவது எளிதான காரியமல்ல வென்பது அதன் அநுபோகத்தைப் பெற்றவர்களுக்கே தெரியவரும். பத்திரிகைக்குரிய சாதனங்கள், தபால்பில்லைகள், காரியாலயசிப்பந்திகளின் சம்பளம் முதலிய பலவிஷயங்களுக்கும் பணமுடை ஏற்படுமாயின் எடுத்த காரியத்திற்குக் குந்தகம் வந்து விடுகிறது. இஃது நேராவண்ணம் காக்கக்கடமைப்பட்டுள்ளவர்கள் முன்கூறப்பட்டவர்களேயாகும். தங்களின் பல உயர்ந்த செலவுகளின் மத்தியில் இதற்கென்றேற்பட்டுள்ள சொற்பசந்தாவையும் காலந்தவறாது செலுத்துவார்களாயின் அதுவே நமக்குச் செய்யும் பேருபகாரமாகும். மற்றும், பத்திகையை நடத்த, உதவி செய்ய போஷக கர்த்தாக்கள்பலர் முன்வரலாம். இதற்கென நாம் குறித்துள்ள தொகையும் வெகு சொற்பமே. அதாவது 5- ரூபாய். இது ஓர் நன் கொடையேயன்றி வேறல்ல. இங்ஙனம் சுமார் 500 தமிழ் மக்கள் கொடுக்கமுன் வருவாராயின், நமது சஞ்சிகை வாரப்பதிப்பாக வெளிவந்து ஊழியம் செய்யக்கூடுமென்பது பெரியோரறிந்த உண்மை அன்றியும் நமதுபத்திரிகையின் சந்தா ரூ 1 ஆக இருந்ததை ரூ 1—8—0 என உயர்த்தியிருக்கிறோம். இதனைக்கண்டு அன்பர்கள் மனம் வெகுளாதிருப்பார்களாக. மற்றும் இவ்வொருவிஷயத்தைப்பற்றி "ஓர் விண்ணப்பம்" என்னும் தலைப்பின் கீழ் வேறோரிடத்தில் பிரசுரித்திருப்பதை யாவரும் ஊன்றிப் படிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். நிற்க; இனிநமது சஞ்சிகை இன்னும் அதிகப்பக்கங்களுடன், பல அரிய விஷயங்களைத் தாங்கி வெளிவந்துலவும்; கற்றோர் பலரின் கட்டுரைகளைப்பெற்று இனிது நிலவும்; அவ்வப்போது அருமையான சித்திரங்கள் மன்னிக் குலவும். தேசமுன்னேற்றம், பாஷாபிவிருத்தி, இத்துடன் விவசாயம், வியாபாரம், தொழில், வைத்தியம், அரசியல் முதலிய பல விஷயங்களைப்பற்றி அவ்வப்போது எழுதி வெளியிடுவோம். விசேஷமாக தமிழர் முன்னேற்றம், வேலையில்லாத் திண்டாட்டம், அரியசரித்திர ஆராய்ச்சிகள், பெரியோர்சரிதைகள், மாதர் சிறுவர்க்கான விஷயங்கள், முதலியன காலதேசவர்த்தமானங்களை அனுசரித்து எழுதப்படும். பத்திராதிபர் குறிப்புகளுடன், உலகப்பொதுச் செய்திகளையும் நமது "ஆனந்தவிஜயன்" தாங்கி வெளிவருவானென்பது உறுதி. "ஆனந்தவிஜயனை" அலங்கரிக்க பல வித்வசிரோன்மணிகள், தேசாபிமானிகள், சரித்திர ஆராய்ச்சிக்காரர் முன்வந்திருப்பது நம்மால் நன்றியுடன் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும். ஜாதி மதத்துவேஷமின்றி நடுநிலைமை வகித்து, முன்கூறிய பல அங்கங்களுடன் வெளியாகும் இம்மாசிகை வெகுசீக்கிரத்தில், ஜகத்பிரசித்தி பெற்று விளங்குமென்பது எமது எண்ணம்.

இவ்வெண்ணம் யாவும் கைகூடவும், "ஆனந்த விஜயன்" என்னும் இச்சஞ்சிகைக்கு சகல மங்களகரமான நன்மைகளை அருளவும், வல்ல இறைவனை மனமொழி மெய்களால் வழுத்துவதுடன் உயரிய நோக்கத்துடன் எமக்கு இதைக் கொடுத்து ஆதரித்த நண்பர் ஸ்ரீமான் பாலபண்டிதர் மாசிலாமணிநாடார் அவர்களையும், இதனை ஆதரிக்க முன் வந்துள்ள பெரியார், சந்தாநேயர்கள் விஷயதானம் புரிவோர், போஷககர்த்தாக்கள், அபிமானசீலர் முதலிய யாவரையும் பரம்பொருள் ஆசீர்வதிக்குமாறும் இறைஞ்சுகின்றோம்.

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.

ச. தா. பாலையா பிள்ளை.

அடுத்துவருந் தேர்தல்.

(ச. தாமஸ் பாலையா பிள்ளை)

மாண்டேகு-செம்ஸ்போர்ட் சீர்திருத்தத்தால் கிடைக்கப்பெற்றுள்ள இரண்டாவது சட்ட சபையின் கால வரையறை இம்மாதத்துடன் முடிவடைகிறது. இனி அடுத்த தேர்தல், இவ்வருடம் நவம்பர் மாதம் தேசமெங்கும் நடத்தப்படும். இதற்காக எங்கும் தேர்தல் அறிக்கைகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. இத்தேர்தலில் தனிப்பட்ட ஹோதாவில் நிற்கும் சில கனவான்களைத் தவிர, மற்ற அபேக்ஷகர்கள், ஒவ்வொரு கக்ஷியினைச் சேர்ந்தவர்களாயிருக்கின்றனர். இந்தக்கக்ஷிகளோ—இந்த அடிமை நாட்டில்-ஒன்றல்ல, இரண்டல்ல. ஜஸ்டிஸ் கக்ஷி, சுயராஜ்யக்கக்ஷி, மிதவாதக்கக்ஷி, சுயேச்சைக்கக்ஷி, நேஷனல் பிடரேஷன்கக்ஷி, இப்படிப் பலவிதமாக உள்ளன. ஒவ்வொரு கக்ஷியினரும், தங்களுக்குப் பிரதான நோக்கம் "இந்தியா விடுதலை" அடையவேண்டுமென்பதே எனக் கூறிவிட்டு, ஒருகக்ஷியார் இன்னொரு கக்ஷியாரைத் தூஷிப்பதும், பிரிதொருகக்ஷியார், மற்றக்கக்ஷியினரால் எதுவுமே செய்யமுடியாது; தாங்கள் தான் உண்மையான பேர் வழிகள், தங்களைத் தெரிந்தெடுத்து சட்டசபைக்கு அனுப்பிவிட்டால் வானத்தை வில்லாய் வளைப்போம்; மணலைக்கயிறாய்த் திரிப்போம் என்று கூறுகின்றனர்.

யார் எப்படிப் பேசினபோதிலும் சரியே, இந்த சீர்திருத்தத்தால் அமைக்கப்பட்டுள்ள சட்ட சபைகளால், ஜனங்களுக்கு

எவ்வித உருவகமான நன்மையையும், இந்த மெம்பர்களால் செய்யமுடியாது என்பதே நமது துணிபு. இதற்குக் காரணம், இந்தியா சட்டசபை செய்த தீர்மானங்களை அமுலுக்குக்கொண்டுவரவோ, நிராகரித்து விடவோ, ஓர் சமயம் தீர்மானத்தையே சட்டசபைக்குக்கொண்டுவர அனுமதிக்கவோ நிராகரிக்கவோ கவர்னர் ஜெனரல் அதிகாரம் பெற்றிருக்கின்றார். ஜனப்பிரதிநிதிகள் ஏகமனதுடன் நிறைவேற்றிய சில தீர்மானங்கள், லார்ட் ரீடிங் அவர்கள் காலத்தில் அவரால் நிராகரிக்கப்படவில்லையா? ஆகவே, இத்தகைய அதிகாரம் அரசப்பிரதிநிதியின் கையில் இருப்பதால், இந்தியா சட்டசபையில் ஜனப்பிரதிநிதிகள் நிறைவேற்றும் தீர்மானங்களால் பிரயோஜனம் யாது? அங்கு மாத்திரமன்றி, மாகாண சட்ட சபைகள் விஷயத்திலும், கவர்னர்கள் இவ்வித அதிகாரமே பெற்றிருக்கின்றனர். சென்னை சட்டசபையைப் பொறுத்தமட்டில் எத்தனையோ உதாரணங்களைக் காட்டலாம். இவைகளையெல்லாம் உத்தேசித்தே, காந்தியடிகள் சட்டசபைப் பகிஷ்காரத்தை ஏற்படுத்தினார். இந்தக்கொள்கையையும் பொது மக்கள் ஏற்று நிறைவேற்றினர். ஆனால் காலஞ் சென்ற தேசபந்துதாஸ் அவர்கள் சிறையினின்று வெளியே வந்ததும், காங்கிரசிற்குள்ளாகவே "சுயராஜ்யக்கக்ஷி" என ஒன்றை ஸ்தாபித்து, சட்டசபைப் பகிஷ்காரத்துக்கு விரோதமாகப் பிரசாரம் செய்து, சட்டசபைப் பிரவேசத்தை உண்டாக்கினார். இதை விளக்கின் விரியும்.

நாம் முன்னர் கூறியது போல், சட்டசபையால் எவ்வித உருவகமான நன்மையும் ஜனங்களுக்குக் கிடைக்க வழியில்லையென்றால், பின் ஏன் இந்த அபேக்ஷகர்கள் இவ்வளவு கஷ்டப்படுகின்றார்கள் என்று கேட்கலாம். அதற்கும் விடையளிக்கின்றோம்.

அபேக்ஷகர்களில் சிலர் தவிர, மற்றவர்கள் ஒவ்வொரு கக்ஷியினைச் சேர்ந்தவர்களென்று ஆரம்பத்திலேயே கூறியிருக்கின்றோம். இக்கக்ஷிகள்யாவும் பொதுவாகவே, மக்களுக்கு இதம் செய்ய வேண்டுமென்னும் நோக்கத்துடனேயே ஆக்கப்பட்டவை. காலக்கிரமத்தில் இந்த நோக்கம் பிரதானமாக நின்று விளங்காவிடினும், முற்றிலும் இல்லாமற்போவதுமில்லை. இக்கக்ஷிகளொவ்வொன்றும், தங்கள், தங்களுக்கெனெ சில திட்டங்கள் வகுத்து வைத்திருக்கின்றன. இத்திட்டங்களுக்குட்பட்டு, சட்டசபைகளில், மெஜாரட்டி பெற்று ஓர் தீர்மானத்தை நிறைவேற்றக்கூடும். எந்த மெம்பர் தீர்மானம் கொண்டுபோன போதிலும் சரியே, அதற்குப் பெரும்பான்மையான ஆதரவு இருந்தாலன்றி

அது அடிபட்டுப்போகும். ஆகையால், ஓர் கக்ஷியைச்சேர்ந்த ஒருவர் ஓர் தீர்மானம் கொண்டுபோவாரானால், அக்கக்ஷியைச் சேர்ந்த யாவரும் அதற்கு ஆதரவு கொடுப்பார்கள், தீர்மானமும் நிறைவேறிவிடும். இதனை அமுலுக்குக் கொண்டுவரவோ, நிராகரிக்கவோ, மேலே ஒருவர் இருந்த போதிலும், கொண்டுவரப்படும், அல்லது நிறைவேற்றப்படும் சகல தீர்மானங்களும் நிராகரிக்கப்பட்டு விடும் என்று சொல்வதற்குமில்லை. ஆகையால் தான் இதற்கு முன்னர் "உருவகமான" நன்மை எதுவும் செய்ய முடியாதென்று கூறப்பட்டது. சில தீர்மானங்கள், ஜனப்பிரதிநிதிகளுக்கும், ஜனங்களுக்கும், பிடித்தமானதாயிருக்கலாம். ஆனால், அதுவே கவர்னர் ஜெனரலுக்கோ, கவர்னர்களுக்கோ, பிடித்தமில்லாமலிருக்கலாம். இச்சமயம் தான் தீர்மானத்தின் கதி அவ்விதமாகி விடுகிறது. இதனைத்தவிர்த்து ஏதோ வகுப்பு நன்மைக்கான சில விஷயங்கள், மற்றும் சில சாதாரண காரியங்கள். இந்த சட்டசபையால் நிறைவேற்றிக்கொள்ள இடமுண்டு. இதற்கும் மெஜாரிட்டியிருந்தால் தான் முடியும். இவ்வித சில விஷயங்களேனும் ஜனங்களுக்குக்கிடைப்பதால், அதனை ஏற்றுச்செய்ய சட்டசபைக்கு மெம்பர்கள் செல்லவேண்டியிருக்கின்றது. இங்ஙனம் செல்லக்கூடியவர்கள், பொது நன்மையில் கண்ணோக்கமுள்ளவர்களாகவும், தைரியமாகக் கவர்ன்மெண்டாருடன் போராடக்கூடியவர்களாகவும், போதுமான அவகாசத்துடன் வேலை செய்யக்கூடியவர்களாகவும், சுயநலதியாகிகளாகவும், நாட்டின் நன்மையையும், ஜனங்களின் இதத்தையுமே கோருகின்றவர்களாகவும் இருக்கவேண்டியது அவசியம். படிப்பினாலோ, திரண்ட ஆஸ்தியினாலோ, வெறும் வாய்ச்சாலகத்தினாலோ, வீண்படோடோபத்தினாலோ, எவரையும் மயக்கிவிடலாமென எண்ணி வரும் அபேக்ஷகர்களிடம், முன் கூறிய லக்ஷணங்கள் உண்டாவென்பதை நன்காராய்ந்து, முன்னதாகக் கூறிய லக்ஷணங்களின்றி, பின்னால் கூறிய அம்சங்கள் மட்டும் இருக்குமாயின் அவர்களைச் சட்ட சபைக்கு அனுப்புவதைப்பார்க்கிலும் அனுப்பாமலிருப்பதே மேலான விஷயமாகும்.

நிற்க, இப்போது வெளியாகும் அறிக்கைகள் பலவற்றையும் பார்த்தோம். இரண்டொன்றைத்தவிர, மற்றவைகளில் தூஷணைகளே மிகுந்திருக்கின்றன. தேர்தலின் போது வெளியிடப்படும் அறிக்கைகள், பொது ஜனங்களின் மனதைக் கவரத்தக்க விதமாயிருக்க வேண்டுமேயன்றி, வெறுந்தூஷணையாலாகும் பயனென்னவோ ஈசனுக்கே வெளிச்சம். சில அபேக்ஷகர்கள், தாங்கள் இது வரையிலும் செய்துள்ள வேலைகளை வரிசையாகக் குறி

ப்பிட்டு, இனிச்செய்யப்போகும் வேலைகளையும் குறித்திருக்கின்றனர். இது வரையிலும் செய்துள்ள வேலைகள் ஒருபக்கமிருக்கட்டும், இனிச்செய்யப்போகும் வேலைகள் என்னவென்பதுதான் யாவரும் கவனிக்கவேண்டிய அம்சங்களாகும்.

நமது நாட்டிற்கும், அதன் மக்களுக்கும் இன்றியமையாத சாதனங்கள் எவை, அவைகளைத்தவிர்க்க என்னென்ன வேலைகள் தாங்களோ, அல்லது தங்கள் கக்ஷியோ செய்யத்தயாராயிருக்கின்றது என்பது தான் இப்போது தெரியவேண்டியது. நமது தேசம் இப்போது வறுமை வாய்ப்பட்டுத் தவிக்கின்றது. அரை வயிற்றுக்கஞ்சியும், உடுக்க நான்கு முழவஸ்திரம் கிடையாது அல்லலுறும் பாராத மக்கள் லக்ஷக்கணக்காயிருக்கின்றனர். இது ஓர் புறமிருக்க, வேலையில்லாத் திண்டாட்டத்தின் கொடுமை தினே தினே அதிகரித்து வருகின்றது. ஒவ்வொரு மாகாணத்திலும் உயர்தரப் பரீக்ஷை கொடுத்த மாணவர்கள் பட்டங்களை வாங்கி, பெட்டியில் வைத்து விட்டு, வேலையின்றி, தொழிலின்றி, மூலையைக் கட்டி அழுகிறார்கள். அவர்களுக்குச் சமாதானமென்பதே கிஞ்சிற்றும் கிடையாது. ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து, வேறு தொழில் செய்ய வகையின்றி இவ்வாறு கஷ்டப்படுவோரின் தொகை ஓராயிரம், ஈராயிரம் என எண்ணி விடவேண்டாம், லக்ஷக்கணக்காகி விட்டது. இது பிரிதொருபக்க மிருக்க, வரிகளின் உயர்வு தாங்கக்கூடியதாயில்லை. இந்த வரியாவது, கல்வி, விவசாயம், நீர்ப்பாய்ச்சல், தொழில், முதலிய விஷயங்களில் பெரும்பான்மையாகச் செலவழிக்கப்படுகின்றதோவென்றால், அதுவுமில்லை, வரிப்பணத்தில் பாதிக்கு மேல் அதாவது சுமார் 65 கோடி ரூபாய் இராணுவத்துக்கென்று மட்டும் செலவழிக்கப்படுகின்றது. இத்துடன், அந்நிய நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படும் விஷயங்களிலும் கவனம் செலுத்தப்படவேண்டியது அவசியம். இந்நாட்டுக்கு அவசியமானது போக, மீதியானவைகளை ஏற்றுமதி செய்யலாமேயன்றி, யாவையும் ஏற்றுமதி செய்து விட்டு, இந்நாட்டு மக்களின் வயிற்றில் அடிப்பதையும் கவனிக்கவேண்டும். மேலும், ஸ்டாம்பு விஷயங்களைக் கவனித்துப்பார்ப்போம். தபால் ஸ்டாம்பு கட்டணங்கள்யாவும் உயர்ந்து விட்டன. கோர்ட்டு சம்மந்தமான கட்டணங்களும் இக்கதியையே அடைந்திருக்கின்றன. சிக்கனம், சிக்கனம் என்று கூறப்பட்ட போதிலும், பிரிட்டிஷ்-இந்தியா கவர்ன்மெண்டின் செலவு, எப்போதும் வரவுக்கு மேலாகவேயிருக்கின்றது. வரவைப்பார்க்கிலும் செலவைக்குறைத்து, கல்வி, இதிலும் கட்டாயக்கல்வி, தொழில், விவசாயம் போன்ற விஷயங்களில் சர்க்காரார் நன்கு கவனம் செலுத்தவேண்டியது அவசியமாயிருக்கின்றது. இம்மா

திரி பல விஷயங்களையும் கவனித்து, இதற்காகத் தாங்கள் செய்யப்போகும் முயற்சிகள் என்ன வென்பதை காண்பிவிக்கவேண்டும்.

இந்த சமயத்தில், வோட்டர்களாகிய பொது ஜனங்களுக்கு ஓர் வார்த்தை. வோட்டர்களே, உங்களுக்குள்ள சலாக்யம் அதிகம். நீங்கள் இந்த சலாக்யத்தை வீணே பிரயோகிப்பீர்களானல், அதனுல் வரும் கஷ்டத்தையோ, நஷ்டத்தையோ நீங்கள் பெற்றுத்தான் தீரவேண்டியிருக்கும். எந்த அபேக்ஷகரானபோதிலும் சரியே, அவர் எந்தக்கக்ஷியினைச் சேர்ந்தவராயிருந்தாலும் சரியே, அவர் உங்கள் நன்மைக்காகப்பாடுபடுகின்றவரா, சுயநலமற்றவரா, பரோபகாரியா என்பன போன்றவைகளைக் கவனித்து உங்கள் மனச்சாக்ஷியின்படி வோட் செய்யவேண்டுமேயல்லாது முகத்தாக்ஷண்யத்திற்குக் கட்டுப்பட்டு வோட் செய்யலாகாது. இந்த சட்டசபைகளால் நன்மையுண்டோ, தீமையுண்டோ, அதுவேறு பிரச்னை. அபேக்ஷகர்கள் சட்ட சபைக்குச் செல்லுவதென்றும் நீங்களும் வோட் செய்வதென்றும் தீர்மானமாகிவிட்டதால் உங்கள் பொறுப்பு இன்னதென்பதையுணர்ந்து, தக்க மனிதர்களை அனுப்புமாறு வணக்கத்துடன் எச்சரிக்கின்ரும்.

நாம் இத்தலையங்கத்தை முடிக்குமுன் ஒன்று கூற விரும்புகின்ரும். அதாவது, தேசத்திற்கு அந்த நன்மையைச் செய்துவிடுவோம், வோட்டர்களுக்கு இந்த உபகாரத்தைச் செய்துவிடுவோம், எனச் சொல்லி வோட்டுகளைப் பெற்று, சட்டசபைகளுக்குச் சென்றபின், தங்கள் வகுப்பு நலத்தையும், அதன் முற்போக்கை மட்டுமே கருதி, பிறவகுப்பினரை இழித்துக்கூறியும், தாழ்வடையும் படி செய்தும், மோசம் பண்ணுகின்றவர்களுக்கு எந்தக் காரணத்தை முன்னிட்டேனும் வோட் கொடுக்கலாகாது. மற்றவை அடுத்த சஞ்சிகையில் வரைவாம்.

நீதிவாக்கியம்.

யானையைக் குளிப்பாட்டி அதினிஷ்டம் போல் விட்டுவிட்டால் வெகு சீக்கிரத்தில் அழுக்காக்கிக்கொள்ளும். தொழுவத்தில் கட்டிவிட்டால் அழுக்காக்கிக் கொள்ளாது. ஸாது சங்கத்தாரால் தூய்மையடைந்த ஒருவன் உலகத்தாரோடு பழகுவானுனல் தூய்மையை இழக்கநேரிடும். ஈசுவரனிடத்தில் மனதை நிறுத்தினல்மட்டும் இழக்க நேரிடாது. தொழுவத்திலிருந்து தரித்துவிடப்பட்ட யானை மரங்களையும் செடிகளையும் பிடுங்கி எறியும். பாகன் அங்குசத்தால் குத்தினதும் அடங்கிவிடும். அடக்கி ஆளாத மனம் வீண் எண்ணங்களில் செல்லும். விவேகத்தால் தாக்குண்டால் கண் விழித்துக்கொள்ளும்.

குழந்தை மணத்தின் கொடுமை.

சென்னை உயர்தர நீதி மன்றத்தில் இருபத்தாறு வயதுள்ள ஒருபார்ப்பன வாலிபன் பதின்மூன்றுவயதுள்ள சிறுமியாகிய தன்மனைவியோடு பதின்மூன்று நாள் வாழ்ந்தபின், அவள் ஆடையில் மண்ணெண்ணெய் விட்டு நெருப்பு வைத்தான் என்ற குற்றத்திற்காக விசாரிக்கப்பட்டானென்பது பத்திரிகை வாசிப்போர் நினைப்பிலிருக்கலாம். சிறுமி இறந்து போனாள். பெண் வைத்தியர், (லேடி டாக்டர்) மாஜிஸ்டிரேட் முன்னர் இச்சிறுமி மரணவாக்கு மூலம் கொடுத்தாள். எதிரி வாக்கு மூலத்திலிருந்தும் வேறு சாட்சிகள் இரண்டொருவர் கொடுத்த சாட்சியத்திலிருந்தும் சிறுமி தன் கணவனது காம இச்சையை நிறைவேற்ற ஒருப்படவில்லை யென்பது வெளியாயிற்று. எனினும் போதுமான சாட்சியின்மையால் புருஷன் விடுதலைபடைந்தான். புருஷனது பொருக்கமுடியாத மிருக இச்சைக்கு இணங்க மனமின்றி, இச்சிறுமி தற்கொலைபுரிந்துகொண்டிருக்கவேண்டுமென்று ஜூரிமார் அபிப்பிராயப் பட்டார்கள். கொலையோ, தற்கொலையோ, மரணத்தின் காரணம் எதுவாயினும் சரி; ஓர்ஆடவனது வெங்காம வெங்கனலுக்கு ஒரு பச்சைக் குழந்தையாகிய செல்வச்சிறுமி பலியாயினள் என்பது வெள்ளிடைமலை. இவ்வழக்கைப்பற்றி எழுதும்போது மகாத்மா காந்தியடிகள் காமத்திற்குக் கண்ணில்லை. கருணையில்லை என்று குறிப்பிடுகின்றார்:

இனி இந்த வழக்கிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என்னை? குழந்தை மணத்தின் கொடுமை, நீதிமன்ற வாயிலாக, இவ்வளவு பயங்கரமான- பரிதாபகரமான- நிலையில் வெளிப்பட்டு, பொதுமக்கள் கவனத்தைக் கவர்ந்து நிற்பது இதுவே முதல் தடவையாகுமென்று "இந்தியன் ஸோஷல் ரிபார்மர்" பத்திரிகை எடுத்துக் காட்டுகின்றது. இத்தகைய கொடுமைகள் அநியாயங்கள்—நூற்றுக்கணக்கானவை— நீதிமன்றம் ஏறாமலே, நமதுசமூகத்தில் மறைந்துகிடக்கின்றன. நமது மணமுறைகளில் சீர்திருத்தம் விரைவில் செய்யப்பெற வேண்டுவது இன்றியமையாததாகும். காமத்திற்கு இரையாகாது நெருப்பிற்கு விருந்தான சிறுமியின் சிறுகதை இப்பாடத்தினையே இன்று நமக்கு வற்புறுத்துவதாகும்.

குறித்த வழக்கில் எதிரி தண்டனையடையாவிட்டாலும், நான்கு அம்சங்கள் நன்றாக ஐயந்திரிபின்றி மெய்ப்பிக்கப்பட்டுள்ளன என்று மகாத்மா கூறுகின்றனர்.

(1) மணவாழ்க்கைக்குக் கொண்டுவரப்பெற்ற சிறுமியின் வயது பதின்மூன்றே.

(2) இவளது கன்னி யுள்ளத்தில் காம இச்சை இன்னும் பிறக்கவில்லை, இதனாலன்றோ புருஷனது போகஇச்சைக்கு இக் குழந்தை இசைந்தாளில்லை.

(3) புருஷன் தன் வெங்காம வெம்பிணிக்கு, தன் குழந்தை மனைவியை இரையாக்க முயன்றான்.

(4) சிறுமி உயிர் துறந்தாள்.

இந்நான்கு விஷயங்களையும் ஆழ்ந்து சிந்திக்கும் வாசகர்க்கு இவ்வழக்கின் பயங்கரமான போதனை புலனாகாமற் போகாது. கல்வி கேள்விகளில்லாத பாமர மக்களுக்கும் அவ்வழக்கு குழந்தை மணத்தின் கொடுமையைக் குன்றின் மேலிட்ட விளக்காக எடுத்து விளக்குமென்பது எமது நம்பிக்கை.

குழந்தை மணம் மிருகத்தனமான தென்றும் இத்தகைய மணத்திற்கும் மதத்திற்கும் யாதொரு தொடர்புமில்லையென்றும் இவ் விஷயத்தில் ஸ்மிருதிகளெல்லாம் முன்னுக்குப்பின் முரண்படும் பல அபிப்பிராயங்களையே வெளியிடுகின்றன வென்றும், சன்மார்க்க நாசத்திற்கு ஏதுவான கொள்கைகள் அறநூல்களில் காணப்படினும் தள்ளத் தக்கனவே யென்றும் மகாத்மா "இளமை இந்தியா"வில் எழுதியுள்ளார். நமது தர்ம சாத்திரங்களில் இடைச்செருகுதலுண்டென்று அடிகள் கூறுவதை ஆராய்ச்சியாளரான பண்டிதர் அனைவரும் அங்கீகரிப்பார். இவ்விடைச் செருகுகளை எளிதில்கண்டு. விளக்குவதற்கு அடிகள் ஓர் ஆலோசனை சொல்லுகிறார். ஒரு ஸ்மிருதியில் நல்லொழுக்க வளர்ச்சிக்கு இன்றியமையாத உயர்ந்த கொள்கைகள் சில கூறப்பட்டுள்ளன என்று வைத்துக்கொள்வோம். இக்கொள்கைகளோடு முரண்படும் அபிப்பிராயங்கள் அதே ஸ்மிருதியில் வேறு இடங்களில் காணப்பட்டால் இவையெல்லாம் பிற்காலத்தில் விசுவாமித்திர சிருஷ்டியாக நுழைக்கப்பெற்றனவே யென்று கருதுவதில் பிழையொன்றுமில்லை; இது ஓர் சிறந்தயோசனையே யாகும்.

சிறப்பாக, இவ்வரிய ஆலோசனையைக் கைக்கொள்வதோடு பொதுவாக நல்லொழுக்கம் கொள்ளும் கொள்கை எதுவாயினும் எந்நூல் காணப்படினும். கொள்ளத்தக்கதன்று தள்ளத்தக்கதே யாம்—என்ற விதியினையும், இக்காலத்தில் சாத்திர ஆராய்ச்சி

செய்வோர் கைக்கொண்டொழுகல் வேண்டும். பிரமசரிய ஒழுக்கத்தையும் தன்னடக்கத்தையும் புகழ்ந்தோதும் மெய்யுணர்வு பெற்ற ஓர் பேராசிரியர் மிருக இச்சையை மேலோங்கி வளரச் செய்யும் இளமைமணத்தை ஆதரிப்பது எவ்வாறு பொருந்தும் என்ற வினா ஆராய்ச்சியாளர் உள்ளத்தில் உடனே உதயமாகும்.

பேரின்பப் பெருநெறியினின்றும் நெடுந்தூரம் விலகிச் சென்று சிற்றின்பச் சிறுநெறி சேர்ந்தழிவோரே குழந்தை மணம் பாவமல்லவென்று கூறத்துணிவர். ருதுவாகிப் பல்லாண்டுகள், கழியுமுன்னர், நடைபெறும் 'மணம்' ஒருபோதும் புனிதத் திருமணமாகாது- அதுபாவமாகவே கருதப்பெறுதல் வேண்டும் என்றும், சிறுமியர் பூப்பதற்கு முன், மணத்தைப்பற்றிய மனக் கருத்தே ஒருவர்க்கும் தோன்றலாகதென்றும் மகாத்மா வற்புறுத்துகின்றார். குழந்தை மணம் நல்லொழுக்க நாசத்திற்குக் காரணமாவதோடு, நம்மக்கள் உடல் வளத்தினையும் சிதைத்து வருகின்றது. "இத்தகைய கொடியவழக்கங்களுக்கு இடந்தருவதால் நாம் ஆண்டவனிடத்திலிருந்தும சுய ஆட்சியினின்றும் வெகுதூரம் விலகி நிற்கின்றோம். பச்சிளங்குளந்தையென்றும் சிறுமி யென்றும் சிந்தியாத உள்ளத்தில் கடவுளைப் பற்றிய சிந்தனை தோன்றித் திகழ்வது எங்கே? குழந்தை—மக்கள்பால் விடுதலைப் போர் புரிவதற்குறிய ஆற்றல் விளைவதெங்ஙனம்? தன்னரசு பெறினும், இக்குழவி மக்கள் எவ்வாறு அதனை அரண்செய்து காத்தல்கூடும்? விடுதலைப்போர் என்பது வெறும் கிளர்ச்சி மாத்திரமன்று; சமூகம், கல்வி, ஒழுக்கம் பொருளாதாரம், அரசியல் முதலிய பலவேறு துறைகளிலும் கிளர்ச்சி செய்து வளர்ந்தோங்குவதே சுயராஜ்யப் பேறு"

மகாத்மாவின் பொன்னுரைகள் இவை: சமூக விஷயமான சீர்திருத்தத்தை மறந்து, அரசியல் விஷயம் ஒன்றே இந்நாளில் கவனிக்கப்படல்வேண்டுமென்று கூறுவோர் இவ்வுரைகளை நன்கு சிந்தை செய்து தெளிவார்களாக! சீர்திருத்தம், அரசியல் என்னும் இருபெருஞ்சிறகுகள் கொண்டே நாம் சுயராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும். உணர்வு கொண்டு சீர்திருத்தங்கள் செய்யப் பெறுதல் வேண்டும். தேசீய இயக்கத்திற்கு ஆசார சீர்திருத்த இயக்கமும் ஓர் உபநதியாக அமைந்து விளங்கல் வேண்டும்.

நமது நாடு தன்னரசு நாடெனின், இன்றியமையாத பல சீர்திருத்தங்களும் சட்டங்களாதல் கூடும். ஆகவே நாம் முதற்

கண் சுயராஜ்யத்திற்கே பாடுபட வேண்டும்: சீர்திருத்தங்களையும் பின்னால் பார்த்துக்கொள்ளலாம் என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் இது முற்றிலும் சரியான கொள்கையன்று; சமூகத்தைச் சீர்திருத்துவதற்குச் சட்டங்கள் இன்றியமையாதனவேயாகும் என்று சொல்வதில் பொருளில்லை. மக்கள் உள்ளத்தில் பிரசார வாயிலாகக் கிளர்ச்சியுண்டு பண்ணுவதும், முக்கியமானால் குழந்தை மணம் இரக்கமிலா அரக்கர் செயலே என்னும் கருத்து நம் பொதுமக்கள் உள்ளத்தில் வேரூன்றியிருக்குமெனின், நாம் குறிப்பிட்டுள்ள வழக்கு ஏற்பட்டிராதென்பது ஒரு தலை. குறித்த வாலிபன் கல்வி மணம் வீசப்பெறாத காட்டாள் அல்லன்; அறிவாளி; பொதுஜன அபிப்பிராயம் குழந்தை மணங்களுக்கு விரோதமாக இருந்திருப்பின் இருபத்தாறு வயதுள்ள இவ்விளைஞன், ஓடி விளையாடும் இளவயதுப் பெண் குழந்தையை எவ்வாறுமணந்திருத்தல் கூடும்? ஆதலால் பதினெட்டு வயதிற்குக் குறைந்த பெண் மணப்பெண்ணாதல் ஒருபோதும் தகாதென்ற கொள்கையினை நம் சமூகத்தில் கிளர்ச்சிசெய்து பரப்பவேண்டுமென்பது மகாத்மாவின் தேர்ந்த கருத்து. இத்தகைய சமூகக்கிளர்ச்சியும், அரசியல் கிளர்ச்சியைப்போலவே இன்றியமையாததாகும். மேலும் இது அரசியல் கிளர்ச்சிக்கு அனுகூலமானதாகவே கருதப்படல்வேண்டும் என்பது எமது கொள்கை.

குமரன்.

விவசாயம்.

ஸ்ரீமான். எஸ். எம். துரையப்ப பிள்ளை
எழுதுவதாவது:—

உலகம் உத்கிருஷ்டமான நிலைமையிலிருக்கவும், அதில் வாழும் மாந்தர்கள் சுபிக்ஷமுடன் வாழவும் உற்ற துணையாயிருப்பது விவசாயமே. எத்தகைய நிலைமையிலுள்ள எந்த மனிதனுக்கும் அவனது ஜீவாதாரத்தைப் பெருக்கிக்கொள்ள பூமியும் விவசாயமும் அத்தியாவசியமாம். இதனால் மனிதர்களின் கௌரவம் நிலைநிறுத்தப் படுவதுடன், பிறர் உதவியின்றி தம் வாழ்நாளைக் கழிக்கவும் ஒருவருடைய அதிகாரத்திற்கோ, சலுகைக்கோ பயப்படாமல் சுயேச்சையுடன் இருப்பதற்கும் உற்ற சாதனம் இவ் விவசாயமே. இவ்வொன்றினால் விவசாயத்தின் மேன்மை எத்தகையதென்பது இனிது புலனாகும். உலகில் வாழும் 156-கோடி ஜனங்களில் முக்கால் வாசிப்பேர் விவசாயிகளௌனத் திடமாகக் கூறலாம். இவ்விவசாயிகளின் பெருமை அளவிடற்கரிது

உழவர், சுயேச்சாதிகாரிகள், அன்னதாதாக்கள், மன்பதைக ளின் ஜீவதாரக் கருவிகள் எனப் பல வகையாகச் சிறப்பித்துக் கூறலாம்.

ஆயிரக் கணக்காகச் சம்பாத்யஞ் செய்யும் சேவகத் தொழிலை விட அரைக்காணி நிலமுடைய சமுசாரியே மேலானவன். சேவகாபி விர்த்தியிலுள்ளவனுக்கு எஜமானன், தன் கீழ் வேலைக்காரர், இவைகளில் பொறுப்பு, உத்தரவாதம் எனப் பல விதமாக அல்லல் படுகிறான். இவ்வேலையில் குற்றம் நேரிடின் தண்டனைக்குள்ளாகிறான். விவசாயியை அதிகாரம் பண்ண யாருக்குப் பாத்தியதை உண்டு? இவன் ஒருவருக்கும் அஞ்ச வேண்டியதில்லை; இவனே தன் நிலத்துக்கு ராஜா.

கிருஷித் தொழில் எளிதான காரிய மன்று. வாய்ப்பேச்சினாலோ, அல்லது மற்றும் தடபுடல்களினாலோ இது பயன்படாமல், சிறந்த ஊக்கமும், அயராமுயற்சியும், மட்டான ஞானமும் இருந்து இத்தொழிலை நடத்த வேண்டும். எப்படி ஒவ்வொரு வேலைக்கும் அதனதன் தகுதிக்குத் தக்கபடி புத்தி சாதுர்யத்தை உபயோகிக்க வேண்டுமோ, அதே பிரகாரம் கிருஷித் தொழிலுக்கும் மனிதர் தங்கள் புத்தியை உபயோகிப்பார்களாயின், இந்தியா இன்றுள்ள இத்தகைய க்ஷீண திசையிலிராதென உறுதியாகக் கூறலாம். கிருஷித் தொழில் பாரம்பரையான தொழிலான படியால் அது அநுபோகத்திலேயே நம்மவர்களுக்கு எளிதான முறையில் வந்து விடுகிறது. எனினும் இவ்விவசாயத்தை இன்னும் முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமாயின் அதற்கென்றே நமது சாதுர்யத்தை உபயோகித்தாலன்றி விவசாயமும் கெட்டுப்போகிறது. எப்போது உலக ரக்ஷிப்புக்கான விவசாயம் க்ஷீண திசை யடைகிறதோ, அப்போது மக்களும் கஷ்டப்படுகின்றார்கள். ஆகவே, கிருஷித் தொழிலை ஏனோதானோ வென்றும் பாராமுகமாகவும், ஏராளமான நிலத்தை வைத்துக் கொண்டு வீணே நடத்தாமல் நிலம் கொஞ்சமாயினும், அதற்குத் தக்கதாக யோசனைசெய்து சரியான மார்க்கத்தில் நமது கிருஷித் தொழிலை செய்வோமாயின் நமக்கு நிகர் யார்?

நிலங்களையுடையவனே சமுசாரியெனப் படுவான். ஒருவனுக்கு 500 ஏக்கர் இருக்கலாம்; பிறிதொருவனுக்கு 30 ஏக்கர் நிலம் இருக்கலாம்; அவனவன் ஐவேஜிக்குத்தக்க படி மிராஸ்தார், மிட்டாதார், விவசாயி என அழைக்கப்படுகிறார்களெனினும் தாரதம்மியத்தில் இவர்கள் யாவரும் ஒருவரே. இவர்களுக்குரிய நிலங்களில் பயிரிடும் வகையும், தினுசும் யாவும் ஒன்றேயாகும்.

விவசாயத்திற்கு மிகவும் முக்கியமானது நிலம். இந்நிலத்தைப் பண்படுத்துவதிலேயே விவசாயியின் சாமர்த்தியம் அடங்கியிருக்கிறது.

நிலங்கள் பல விதம். கரிசல், செம்மண் தரை, உவர் நிலம், மணல் தரை, மண் கண்டமுள்ள பாகம் எனப் பலவிதம். இவைகளிலும் நன்செய், புன்செய் என இருபகுதிகளாகப் பகுக்கப்பட்டிருக்கின்றன. நெல், வாழை முதலியன பயிரிட நன்செயும், மற்றும் தானிய வகைகளும், கிழங்கு வகைகளும் பயிரிட புன்செயும், உபயோகப் படுகிறது. மலை நாடுகளில், காப்பிக்கொட்டை, தேயிலை, சின்கோனு, உருளைக் கிழங்கு, ஏலம், கிராம்பு முதலிய உயர்ந்த சரக்குகள் பயிரிடப் படுகின்றன. இவைகளைப் பயிரிடுவதற்கு அதனதன் தகுதிக்குத் தக்கபடி நிலங்களைப் பிரித்துக்கொள்ள வேண்டும். கரிசல் நிலத்தை எடுத்துக் கொண்டோமானால், இதில் கம்பு, பருத்தி, தினை, கொத்தமல்லி, சாமை முதலியவைகள் உற்பத்தியாகும். செம்மண் தரையை எடுத்துக் கொண்டோமாயின் அதில் சோளம், கேழ்வரகு, சில பயறு வகைகள், கிழங்கு வகைகள் பயிரிடலாம். உவர் நிலத்தில் குதிரை வேலி, வரகு, இப்படி இரண்டொன்று பயிரிடலாமெனினும் இவற்றால் அதிகப் பிரயோஜனமில்லை. மணல் தரையில் தென்னை, பனை, ஈந்து, பேரீந்து முதலியவைகளும் மண்கண்ட பாகங்களில் உயர்ந்த சாமான்களும் விளைவு செய்யலாம். எந்த நிலமான போதிலும் சரியே; விளை பொருள்கள் இவ்விதமாக மாறுபட்ட போதினும் நிலங்களைப் பண்படுத்துவது ஒரே விதமே. நிலத்தை நன்றாக உழவு செய்யவேண்டும், சோமாங்கி மாடுகளை வைத்துக் கொண்டு மேலாக கீறிக்கொண்டு போகாமல் திறமையான மாடுகளை உபயோகித்து ஆழ உழ வேண்டும். அகல உழுவதிலும் ஆழஉழு என்பது பழமொழி. சில விவசாயிகள் மழை தூறினதும் உழ ஆரம்பிக்கிறார்கள். ஒருழவு ஆனதும் அப்படியே பாராமுகமாயிருந்து பின் பல மாதங்கள் கழித்து ஒரு உழவு செய்து விளைபொருள்களுக்கானதை விதைக்கின்றனர். இது சுத்தமோசம். ஈரமிருக்கும்போது ஒரு தரமும், அடுத்த ஐந்தாம் நாள் ஒரு தரமும், ஒரு மாதத்துக்குப்பின் மற்றொரு தரமும் உழுதால் மிகப்பயனுண்டு. அதிலுள்ள களைகள், புல்கள் இவைகள் அற்றுவிடும். பின்னால் சிரமமிராது. இப்படியின்றி மேலாக உழுதுவிடுவோமாயின், பயிர் வகைகள் உண்டாகியபின், களைகள் ஏகபோகமாக முளைத்துச் செடிகளைக் கெடுத்து விடுகின்றன. அல்லது தோட்டக்காரனுக்கு மிகுந்த சிரமத்தை உண்டாக்கி விடுகின்றது.

—

(தொடரும்)

ஈரோடு நகரபரிபாலன சபையும் அதன் அழகிய சிங்கார வனமும் (பார்க்)

பார்க் அல்லது சிங்கார வனமென்று சொல்லப்படும் அழகிய தோட்டங்களை இப்பத்திரிகையின் வாசகர்கள் அறிந்திருப்பார்கள். உலகத்திலுள்ள சகல முக்கியமான இடங்களிலும் இப்பேர்ப்பட்ட பார்க்குகள் நிறைந்து, அவைகள் நகரங்களுக்கு மணி மகுடமென விளங்கி ஜொலிப்பது ஓர் புறமிருக்க, நகரமாந்தர்களுக்கும் அநேக நன்மைகளைக் கொடுக்கும் சாதனங்களாயிருக்கின்றன.

இக்காலத்தில் மட்டுமன்றி, முற்காலத்திலும் இந்தியாவில் சிங்காரவனங்கள் நிறைந்திருந்தன வென்பதற்கு பல உதாரணங்களுண்டு. வட இந்தியாவிலுள்ள யமுனா நதிக்கரையில் தேஜோமயமாய்க் கட்டப்பட்டுள்ள தாஜ் மஹால் என்னும் ஜோதி அரண்மனையைச் சுற்றியுள்ள அழகிய சிங்காரவனம், கண்டோர் மனதைக் கவரத்தக்க விதமாக அமைந்திருப்பதை யாவரும் அறிந்தே இருக்கின்றனர். மற்றும் மகாராஜாக்களும், ஜமீந்தார்களும் செல்வ வந்தர்களும் தாங்கள் உல்லாசமாக இருக்க வேண்டியும், சுகமான காற்றை சுவாசிப்பதன் பொருட்டும், பல சிங்கார வனங்களைத் தங்கள் சொந்தத்திலேயே உண்டாக்கியிருந்தனர். விவிலிய நூற்படி பார்த்தால், உலகில் மனிதர்கள் சிருஷ்டிக்கப்பட்டதே "ஏதேன்" என்னும் சிங்காரத்தோட்டத்தில் தான் என்று தெரிய வருகிறது. காலம் செல்லச் செல்ல, சிங்காரவனங்கள் நாடெங்கும் நிறுவப்பட்டன. முன்னர் கூறிய பணம் படைத்தோர் தவிர, ஏனையமக்களும் சிங்கார வனங்களின் நன்மையை எளிதிற் அடையும்பொருட்டு பொது ஜனசேவை செய்வோர் பல இடங்களிலும் பார்க்குகளை ஸ்தாபித்தார்கள். இத்தோட்டங்கள் அழகுபட இருப்பதன் பொருட்டும், ஆங்கு செல்வோர் அதன் இன்பங்களைக்கண்டு நுகரவும், ஏற்றதாக அமைக்க பல கல்வியாளரும், நிபுணர்களும், தாவர சாஸ்திரிகளும், இஞ்சினீயர்களும், அடங்கிய பல சபைகள் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள முக்கியமான நகரங்களிலெல்லாம் இருக்கின்றன. என்னுடைய ஞாபகத்திற்கு எட்டின மட்டில், லண்டன், நியூயார்க் பாரீஸ், வியன்னா, பீட்ரோகிராட், கோபன் ஹேகன், மாட்ரிட், சால்ட்லேக்சிட்டி, ரோமாபுரி, முதலிய பலஇடங்களில், முன் கூறிய சபைகள் 5-முதல் 30 வரையிலும் இருக்கின்றன. இந்தியாவிலும், பிரபல பட்டணங்கள், நகரங்கள் யாவிலும் இப்போது சிங்கார வனங்கள் அமைக்கப்பட்டு, அவைகளும் அநேக நன்மைகளுக்கேதுவாய் விளங்கி

வருகின்றதைக் காண்கிறோம். விசேஷமாக நகரபரிபாலன சபைகளைப் பெற்றிருக்கிற நகரங்கள் இவைகளைப் பெற்று வருகின்றது நற்காலமென்றே சொல்லலாம்.

பார்க்குகளால் ஏற்படக்கூடிய நன்மைகள் ஏராளம் என்பதை அறிஞர்கள் ஒப்புக்கொள்வார்களென எண்ணுகிறேன். இதில் பலவிதமான செடி, கொடிகள், மரங்கள், முதலியன உண்டாக்கப்படுவதால் இதன் அலங்காரங்கள், உபயோகங்கள், கடவுளுடைய சிருஷ்டியின் மகத்துவம், முதலியன எளிதில் உணர்த்தப்படுகின்றன. ஆங்குள்ள விநோத செடிகளின் இயல்பும், எங்கும் பரிமளித்து நிற்கும் மலர்களின் மனோகரமும், இங்கிதமாய்படர்ந்திலங்கும் நுண்ணிய செடிகளின் திண்ணிய வனப்பும், என்னே ஜோபிதமாய் இலங்குகின்றன. இம்மட்டோ நீரூணிகள் பல சிங்காரவனங்களில் அமைக்கப்படுகின்றது. இவைகள் காண்போர் மனதைப் பரவசப்படுத்தத்தக்கவை. நீந்துதற்கென்று ஏற்பட்டுள்ள குளத்தில், உல்லாசமாகப் பொழுதைப் போக்கலாம். அநேகர், இப்பார்க்குகளைப் பார்க்கவருவதால் அவர்கள் தேகாப்பியாசம் செய்பவராய் விடுகின்றனர். கண்ணுக்கும், மனதுக்கும் ரமணீயமான காக்ஷியாயிருப்பதால் மனதிற்கு ஓர்வித உத்ஸாகம் உண்டாக, மனோவலிமையும் அதிகப்படுகின்றது. துக்கமுள்ளோர் பார்க்குக்குப்போனதும், ஆங்குள்ள வனப்புகளைக் கண்டு, சந்துஷ்டியடைந்திருக்கின்றதை நானறிவேன். அநேக வியாதிஸ்தர்கள் நடந்துவருவதினாலும், இங்கு நல்லகாற்றை சுவாசிப்பதினாலும் வியாதியினின்று குணமடைந்திருக்கின்றனர், ஆகவே, இப்பார்க்குகள் பெரியோருக்கும், சிறியோருக்கும், பெண்மணிகளுக்கும், மாணவர்க்கும், சமத்துவத்தைத்தரும் அற்புதசோலை; ஆனந்தத்தருவென்றே கூறலாம். இத்தோட்டங்களால் சமத்துவம் நிலைபெறுகின்றது; நட்புரிமை பலப்படுகின்றது; விடுதலை நாதமும் தொனிக்கின்றது.

நிற்க, இம்மாதிரிபார்க்குகள் அமையப்பட வேண்டிய இடமும் சரியான இடத்திலிருக்கவேண்டும். தண்ணீர் சவுகரியம், சுத்தமான காற்றோட்டம், ஜனங்கள் சுலபமாகவரக்கூடிய தொலை, முதலியன பொருந்தியிருப்பது நன்று. சென்னைமாநகரிலுள்ள, பீபிள்ஸ் பார்க், பெங்களூரிலுள்ள லால்பாக், மைசூரிலுள்ள ராஜா சிங்கார வனம், முதலியன சரியான இடத்தில் அமைந்திருப்பதாலேயே நன்கு பிரயோஜனப்படுகின்றது.

இம்மாதிரியான அரிய நன்மைகளுக்குக் காரணமாயும், நகருக்கு அணிகலனுகவும் விளங்கக்கூடியவிதமாக பார்க் இருப்பதால், ஈரோடு நகருக்கும், பார்க் அவசியமென எண்ணி, ஓர் பார்க் நிருமாணிக்கப்பட்டிருக்கின்றது. இஃது அமைந்திருக்கும் இடமும் சகல வசதிகளேயுமொருங்கே பெற்றிருக்கின்றது ஈரோட்டின் அதிர்ஷ்டமென்றே கூறலாம்.

பொதுவாகவே இம்மாகாணத்தில் தலைசிறந்து விளங்கும் நகர பரிபாலன சபைகள் சிலவற்றுள், ஈரோடும் ஒன்று. அழகிய காவேரிக்கரையின் மீதுள்ள இந்நகரம் வியாபாரத்தில் சிறப்புற்றோங்குவது, ஏராளமான ஜனத்தொகையுடையது. நானுவித இருப்புப்பாதைகள் சந்திக்கும் இடமும் ஈரோடேயாகும். இவ்வளவு சலாக்யமுடைய இந்நகரத்தில், பொது ஜனங்களுக்குச் சகலவித சவுகரியங்களேயும் தன்னுல் இயன்றமட்டும் செய்யவேண்டுமென்னும் மேலான நோக்கத்துடன் உழைத்து இதனேமேன்மையுறக் கொண்டுவருபவர்கள் இந்நகரபரிபாலன சபையின் கவுன்சிலர்களும் அதன் தலைவராகிய ஸ்ரீமான் சீனிவாசமுதலியாரவர்களுமேயாகும்.

ஸ்ரீமான் முதலியார் கல்விக்களஞ்சியம்: பி. ஏ. பி. எல். பட்டதாரி; ஆழ்ந்த சிந்தையும், பரந்தநோக்கமும், சிறந்த நற்குணங்களும், பொதுஜன சேவையில் பிரீதியுமுடைய பெரியார்; அன்னரிடம் தியாகத்தின் மாண்பும், இரக்கம் நிறைந்த எண்ணமும், த்வனித்து நிற்பதை யாவரும் அறிவர். இவருடைய இடைவிடா முயற்சியினுலேயே, இந்நகருக்கு ஜலசவுகரியம் ஏற்பட்டது. எங்கும் தண்ணீர் குழாய்கள் ஏற்டுபத்தியதால் காலரா வியாதியும் பறந்தோடிவிட்டது. நகரின் சுகாதாரம் யாவரும் கொண்டாடத்தக்கது. இந்நகரின் சுத்தமும், ஜலசவுகரியமும் சிறந்த பெரியோரால் பலதடவைகள் புகழ்ந்து பேசப்பட்டிருக்கின்றன. ஸ்ரீமான். முதலியார் இவ்வகையான நன்மைகள் புரிவதுடன், ஏழைமக்களுக்குத் துணைபுரிவதில் கற்பகத்தருவென்றே சொல்லலாம். இதிலும் விசேஷமாக ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கு இவரால் ஏற்பட்டுள்ள நன்மைகள் அனந்தம். ஜாதி-மத துவேஷம் சற்றேனுமின்றி, பலஉத்தியோகங்களைப் பகிர்ந்து கொடுப்பதில் இவர் சமர்த்தர். இவருடைய காலத்தில், ஒடுக்கப்பட்ட குலத்தைச் சேர்ந்த பலரும் பலபாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இங்ஙனம் பொதுநோக்குடன், எவருடைய இகழ்ச்சியையும், புகழ்ச்சியையும் பொருட்படுத்தாது தன் மனச்சான்றின்படி நின்று சேவைசெய்யும் இம்

மகோத்தமவேளே, தென்னிந்தியாவின் கோகலே யென்று கூற லாம். வட இந்தியாவிலுள்ள பூனா நகாசபைத்தலைவராகக் இரு ந்து அரிய சேவைசெய்த பெருமையும், கட்டாய இலவசக் கல் விக்காகப் பாடுபட்ட சிறப்பும், பெருமான் கோக்லேக்கே உரி யது. இதேபோல் ஈரோடு நகரின் முன்னேற்றத்துக்குப் பாடு பட்டும், இதில் கட்டாய இலவசக்கல்வியை ஏற்படுத்தியும், செய் துள்ள நேர்மைக்கு இப்பெரியார் உரியரானது பிராமணரல்லாத சமூகத்துக்கே கௌரவமாகும். இவருடைய இத்தகைய பல நற்காரியங்களைக் கண்டே கனம். ஸர் பாத்ரோ போன்ருர் பலர் பாராட்டிப்பேசியிருக்கின்றனர். இவ்வளவு கல்யாணகுணங்களை யும் அணிகலனுகப் பெற்றுள்ள ஸ்ரீமான் முதலியாரே இந்தப் பார்க்கையும் ஏற்படுத்தினர்.

ஈரோடுபார்க் சகல அம்சங்களையும் பெற்றிருக்கின்றதைக் காணும் உள்ளூர்வாசிகளும், யாத்ரீகர்களும் மனதார, வாயா ரப் புகழ்ந்து பேசுகின்றனர். இப்பார்க்கைக்காணச் செல்லுங் கால் பார்க்கின் வாயற்நிலயம் தென்படுகிறது. உள்ளே சென் ருல், ஓர் நீருணி முத்துக்கள் போன்று தண்ணீரைச் சிதறிக் கொண்டிருக்க, இதனைச்சுற்றிலும் கண்களைக்கவாத்தக்க செடி, கொடிகள் நிறைந்திலங்க, இதன் பின்னுல் பசும்புற்கள் அடர் ந்து மரகதப்பச்சையென விளங்க, சுற்றிலும் சாய்மான பெஞ் சுகள் போடப்பட்டிருக்கின்றன. இதற்கு அடுத்தபக்கம் பெரிய அரசமரமொன்றுளது; அதன் கீழ் பல படிகள் கட்டப்பட்டு ஒவ் வொன்றிலும், நூற்றுக்கணக்கான புஷ்பத் தோட்டங்களிருக்கி ன்றன. மேலே சென்ருல் நேத்ரானந்தமே. எங்கும் புஷ்பச் செடி கள்; ஓர் பக்கம் நீந்தும் குளம்; பிரிதொருபக்கம் விளையாடு மிடம்; இன்னெரு பக்கம் பலவித மரங்கள், இப்படியே எங்கு பார்ப்பினும் கண் கொள்ளாகாக்ஷி. இப்போப்பட்ட இடத்திற்கு விவசாயிகளும், வியாபாரிகளும் வக்கீல்களும், உத்தியோகஸ்த கர்களும், மாணவர்களும், பெண்மணிகளும், ஜாதி மத வித்தியா சமின்றி பார்க்குக்குச் சென்று சகல வற்றையும் கண்டு களிகூர் ந்து திரும்புகின்றனர். பலர் மனோகரமான காற்றை சுவாசித்து க்கொண்டு இரவு 7-8 மணிவரை இருப்பது முண்டு. இத்தகைய சிங்கார வனங்கள், இம்மாகாணத்தில் இன்னும் அநேக இடங் களில் ஏற்பட வேண்டு மென்பதே எனது எண்ணம். இவ்வித நற்காரியத்தில் ஈடுபட்ட, சேர்மன் அவர்களையும், கவுன்சிலர்களை யும் கடவுள் ஆசீர்வதிப்பாராக:

வரிசெலுத்துவோர்

ரச மஞ்சரி.

எப்போதும் நற்சிந்தையுடையவனுயிரு; கடவுள் கிருபை யும் உன்னை விட்டு என்றும் அகலாதிருக்கும். —எமர்ஸன்

* * *

இப்போது உன்னை எதிர்த்து நிற்கும் துன்பங்களைக் கண்டு மனந்தளராதே. ஏனெனில், இவைகளே இனிவரும் நற்காலத்தில் முன் அறிகுறிகளாம். —டெவேலரா.

* * *

தேச சேவையே தெய்வ சேவையாகும். நீ பிறந்த நாட்டிற்கும், அதன் மக்களுக்கும் ஊழியம் செய்ய முந்திக்கொள். தேசாபிமானம் இல்லாத இருதயம், மாசற்ற தெனச்சொல்ல முடியாது. —டாக்டர் நாயர்.

* * *

நல்ல காரியங்களைச் செய்த தற்காக நான் எப்பொழுதும் துக்கப்பட்டதில்லை; இப்பொழுதும் துக்கப்படுவதில்லை. —ஷேக்ஸ்பியர்.

* * *

கைராட்டினம் இந்தியாவின் காமதேனு, கற்பகத்தரு; இதனை எப்போதும், யாவரும் கையாண்டால், இந்தியாவின் அடிமை விலங்குகள் தகர்த்தெறியப்படும். —மகாத்மாகாந்தி

* * *

சுயராஜ்யமே எனது பிறப்புரிமை. —திலகர்.

* * *

இந்தியா முன்னேற்றமடைய வேண்டுமாயின், தீண்டாமை ஒழியவேண்டும். சமத்வம் ஏற்பட்ட அன்றே சுயராஜ்ய வாழ்வாகிய சுகவாழ்வு நமக்குக் கிடைக்கும். —டாக்டர் வரதராஜலு.

* * *

சுதந்தரம் என்பது மனிதருக்குக் கடவுளால் கொடுக்கப்பட்டுள்ள ஓர் அரிய தெய்வீக சக்தியாகும். அதனைப்பெறும் வரையில் விடாது வேலை செய். இறுதியில் வெற்றியே சித்திக்கும். —தேசபந்து தாஸ்.

* * *

பார்ப்பனரல்லாதாராகிய தமிழர்களே, அரசியல் பார்ப்பனரை நம்பாதீர்கள். —தியாகராயர்.

* * *

எனது சக்தி பதின்மரின் சக்தி; ஏனென்றால் என் மனம் பரிசுத்தமானது. —டென்னிஸன்.

* * *

கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்கள்,

ஸ்ரீமான் ஹரிதயாள் எம். ஏ. என்பவர் இந்தியாவின் சிறந்த கல்வியாளரில் ஒருவர். தேசீய விஷயத்திலும், விசேஷமாக கல்வி விஷயத்திலும் ஈடுபட்டுள்ளவர். இவர் சென்ற சிலவருடங்களாக வெளிநாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்து திரும்பியிருப்பதால், உலக அனுபவம் மிகுதியும் உண்டு. எனவே "மாடர்ன் ரிவியூ" என்னும் மாதாந்தசஞ்சிகையில் இவர் "இந்தியாவின் மானக்கேடான விஷயங்கள்" என மகுடமிட்டு எழுதியுள்ள அரியகட்டுரை யொன்றில் காணப்படும் விஷயங்களில் சிலவற்றைக்கீழே குறிப்பிடுகிறோம்.

நாம் நமது பெருமை வாய்ந்த சரித்திரங்களைத் குறித்தும் புராதனக் கலைகளைக் குறித்தும் வெகுவாகப் பேசவேண்டியிருக்க, இந்தியாவின் மானக்கேடான விஷயங்களைக் குறித்து மனங் கூசாமல் தேசாபிமானமற்று நாம் எவ்வாறு விவாதிக்க முற்படக் கூடும்? என்னும் கேள்விகளுக்குச் சமாதானம் கூறுகையில், இத்தகைய அழகிய பதங்களைக் கொண்டும் மற்றும் சுதேசியமென்னும் பூ வேலைகளைக் கொண்டும் நாம் நமது உபந்யாசங்களை அடிக்கடி அலங்கரிப்பதுண்டு. ஆனால் வெளிப்பகட்டான இவற்றை மட்டும் கூறுங்கால், வெட்கக்கேடான விஷயங்களைத் கனவிலும் கருதுகின்றோமல்லோம். இத்தகைய மானக் கேடான விஷயங்கள் நம் நாட்டில் தலைகாட்டும்வரையும் உலகத்திலுள்ள முன்னேற்றமடைந்த மற்றை சமூகத்தாரால் நாம் சமத்துவமான நண்பர்களாயும் சகாக்களாயும் நடத்தப்பட முடியாதென்பதை மறந்துவிடக்கூடாது. மனித வாழ்க்கையில் குறும்புத் தனமாகப் புறக்கணித்து மீறி நடக்க முடியாதவைகளான சில விதிவிலக்குகளுமிருக்கின்றன. ஒரு குடிகாரனையாவது கள்வனையாவது நேர்மையாளரின் சங்கத்திலிடங் கொடுக்கப்படாமல் ஒதுக்கப்படுவது போன்றே, இத்தகைய மானக்கேடான விஷயங்களால் மாசுபடிந்த தோற்றத்துடைய நம் சமூகமும், நாகரீக முதிர்ந்த சமூகத்தாரிடம் சமத்துவமான சமுதாய உரிமைகளையும் எதிர்பார்க்க முடியாது. நாம் அத்தகைய உரிமைகளுக்காகப் போராடலாம். ஆனால் அவை நமக்களிக்கப்படுவதுதான் அசாத்தியம் எனக் குறிப்பிட்டிருக்கின்றார். வெளிநாடுகளின் வெட்கக்கேடு பின்னும் அவர் உலகத்தின் மற்றைநாடுகளிலுள்ள

மானக்கேடான வழக்கங்கள், சிலவற்றை எடுத்துக்காட்டி, ஒவ்வொரு ஜனசமுகத்திலும் மானக்கேடான வழக்கங்களில்லாது போகவில்லை என்றும், அவற்றுள் நம் இந்தியாவின் மானக்கேடான விஷயங்கள் பல உளவென்றும் விளக்கியிருப்பதில், "எந்த ஜனசமூகமும் குறைபாடுகளற்றதாயில்லை. ஒவ்வொரு நாட்டிலும் அநேக கெட்ட பழக்க வழக்கங்களிருக்கின்றன. ஆனால் அவற்றுள் சில விஷயங்கள் மிகக் கேவலமாயும், இயற்கைக்கு விரோதமாயும் மிருகத்தனமானதாயும் அவற்றைச் சொல்லக் கேட்டு வெட்கித் தலைகுனியத் தக்கவைகளாயும் இருக்கின்றன; நீக்ரோவர்களைக் குழப்பக் கூட்டத்தாரால் அடித்துக் கொல்லப் படுவது அமெரிக்காவின் அவமானத்தைக் காட்டுவதாகும்; விபசாரிகளின் வீடுகள் ஜப்பானின் மானத்தை வாங்குவதிலொன்று; குழந்தைகளை நடுத்தெருவில் விட்டுவிடுவது சீனாவின் மானக்கேடான அம்சமாகும். ஸ்காத்லாந்தின் மானத்தை வாங்குவது தெருக்களில் குடித்துவிட்டுக் கூத்தாடும் ஸ்திரீகளின் நிலையே; மற்றும் கெய்ரோவின் மானக்கேடான வழக்கங்களைக் குறித்தும் அறியாதார் யாருமிரார். இத்தகைய கேவலமான பழக்க வழக்கங்கள் ஜனங்களை மனுஷீகத்தன்மைக்குத் தாழ்ந்த நிலையிலாழ்த்துவனவாக விருக்கின்றன. இந்தியாவின் இழிவான விஷயங்கள்; இந்தியாவின் மானக்கேடான விஷயங்களென்ன? அவை பாலிய விவாகமும் இணக்கவயதும், பர்த்தா, தேவதாசிகள், வகுப்புப் பிரிவினைகள், பல மனைவிகளை மணந்துகொள்ளுதல், அகோரவிக்கிரகங்கள், கல்வி யறிவின்மை, அடிமைத்தனமென்னும் எட்டு முக்கிய குறைகளே என்றெடுத்துக்காட்டி நாம் இந்தியத்தாயின் அழகிய நெற்றியைப் பாழ்படுத்தி வரும் இத்தகைய அறுவருக்கத்தக்க கறைகளைத் துடைத்து அந்நெற்றியில் சுயராஜ்யமென்னும் சந்தனத் திலகமிடுவதன் பொருட்டு நாம் களைப்பின்றி மெதுவாயும் சமாதானமாகவும் உறுதியுடனும் உழைக்கவேண்டுமெனக் கூறுகின்றார்.

தேவதாஸிகளும் நடனமாதரும்.

பின்னும் தேவதாஸிகள் நடனமாதர்களைக் குறித்தெழுதுவதில் அவர், ஒவ்வொருநாட்டினும் சமுதாய அநீதிக்குட்படுத்தப்பட்ட பேதையர் பலரிருக்கின்றனர். அவர்களைத் தூஷித்தும் இகழ்ந்தும் ஒதுக்குவது சரியன்று. அவர்களைச்சீர்திருத்தி மீண்டும் சமூகத்தில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும். வாஸ்தவத்திலே அவர்கள் பாபம்செய்கின்றனர் என்பதைவிட அவர்களுக்குப் பாபம் செய்யப்படுகின்றதென்பது தான் பொருந்தும். இவர்களை ஆலயங்களுடன் சம்மந்தப்படுத்தியும்

வாலிபர்களின் சமூகத்தில் அறிமுகம்செய்து வைப்பதுமான வழக்கங்கள் நடுக்கங்கொள்ளத் தக்கனவாம். இக்கெடுதியை ஒருவிதத்திலும் விட்டுக்கொடாமல் அறவே ஒழிக்கச்செய்ய முயலவேண்டும். இம்முக்கியமான விஷயத்தைக் குறித்து இந்திய சமூகம் கவனக்குறைவாக விருப்பதாகத் தெரிகின்றது. கல்வியாளர்களாலும், செல்வாக்குள்ள தலைவர்களாலும் கூட இன்றைக்கும் சதுர்க்கச்சேரிகளுக்கு ஏற்பாடு செய்யப்படுகின்றது. இது இந்தியாவின் மானக்கேடுகளில் மற்றொன்று. குறைபாடுடைய செல்வச்சிக்கனமுறைகளின் பலனாக ஏற்படும் சமுதாயக் குஷ்டநோயின் அகோரமான புண்களை மற்றை சமூகங்கள் மறைத்து வைத்துச் சிகிச்சை செய்ய முயலுகின்றன. ஆனால் நாமோ அவற்றைக் குறித்துப்பெருமை பாராட்டிக்கொள்வதாகத் தெரிகின்றது எனக்குறிப்பிடுகின்றார்.

வகுப்புப் பிரிவினைகள்.

பின்னும் வகுப்புப் பிரிவினைகளைக் குறித்தெழுதியிருப்பதில் ஸ்ரீமான் ஹரிதயாள், ஒவ்வொரு ஜனசமூகத்திலும் ஜாதிகளும் வகுப்புகளுமுண்டு. ஐரோப்பாவில் ஒரு வியாபாரி உழவனொருவனை விருந்துக்கழைப்பதில்லை. ஆங்கு ஒரு வக்கீலின் புதல்வி தச்சு வேலைசெய்பவரின் புதல்வனை மணந்து கொள்வதில்லை. ஆனால் நமது இந்தியாவில் காணும் வகுப்புப்பிரிவினைகளோ மூடத்தனமும் அறிவின்மையும் மலிந்து கிடப்பதாக விருக்கின்றன. ஒருதோட்டக்காரன் வண்ணார ஸ்திரீயை ஏன் மணந்து கொள்ளக்கூடாதென்பதற்கும். காயஸ்திரி வகுப்புலாயர் ஒருவர் வைசிய நியாயவாதியின் புதல்வியை ஏன் கலியாணம்செய்து கொள்ளக்கூடாதென்பதற்கும் சரியான சமாதானம் சொல்வார் யாருமிலர். இந்துக்கள் பெரும் வேதாந்திகளெனச் சொல்லப்படுகின்றது. ஆனால் இத்தகைய ஆபாசமான கடும் திட்டங்களின் கருத்தென்னே? தீண்டாமை தீண்டப்படாதார் என்பவர்களை இழிவுபடுத்தி வைப்பதும் இந்தியாவின் அவமானங்களுள் முக்கியமானது. நாம் நமது சகோதரர்களுக்குள்ளேயே ஏழைகளை இவ்வாறு அநீதமாகவும் இழிவாகவும் நடத்தும் வரையில் நமது இலட்சியங்களில் மற்றை சமூகத்தாரை அனுதாபம் காட்டச் செய்வது சாத்தியமாகாது. இங்கிலாந்தைக் குறைகூறிப் பேசுவதாலும், அரசியல் கிளர்ச்சிகளாலும் மட்டும் சுயராஜ்யம் கிடைத்துவிடாது. சமூகமுழுதும் உயர்ந்து ஒழுக்க நிலைக்கு உயர்த்தப்படும்போதுதான் சுயராஜ்யம் கிட்டும். சுயராஜ்மென்பது பொதுவான கண் விழிப்பினுலுண்டாகும் முன்னேற்றத்

தின் பூவும் பழமுமேயாகும். அத்தகைய முன்னேற்றத்திற்கு அழகிய பாரதநாட்டில் பறையரென்ற சொல்லே அற்றுப்போக வேண்டுவதவசியம் எனக்கூறுகின்றார்.

மற்றைய மானக்கேடுகள்.

கடைசியாக ஸ்ரீமான் ஹரிதயாள் நாட்டின் கல்வியறிவின் மைக்குறித்தும் டில்லி சுதேச சமஸ்தானங்களான ஹைதராபாத், காஸ்மீரம், நேபாளம் முதலான நாடுகளிலும் கட்டாய இலவசக் கல்வி போதிக்கச்செய்யப் படாதிருப்பது மானக் கேடானதென்றும், அடிமைத்தனத்தைப்பற்றி எழுதுகையில் எல்லா மானக் கேடுகளிலும் முக்கியமானது வெளிநாட்டாரின் கீழ் அரசியல் அடிமைத் தனத்திலாழ்ந்து கிடப்பது தானென்றும் நன்கு விளக்கியிருக்கின்றார்.

தொழிலாளரும் முதலாளிகளும்.

இக்காலத்தில் சதா விவாதத்திலிருக்கும் பிரச்னைகளில் "தொழிலாளரும், முதலாளிகளும்" என்பதும் ஒன்று. உலகமெங்கணும் இவ்விவகாரம் தீர்ந்தபாடில்லை. தொழிலாளரால் ஏராளமான லாபத்தைப் பெறும் முதலாளிகள் பேராசையின் வாய்ப்பட்டு, செய்யும் கொடுமைகளே இப்பிரச்னைக்கு அஸ்திவாரமாகும். லாபமொன்றே கண்ணுயிருந்து பெட்டியையும், வீட்டையும், பணத்தால் நிரப்ப முதலாளி எதிர்பார்த்து வேலை செய்யும் போது, அரைவயிற்றுக் கஞ்சிக்கும் திண்டாடும் தொழிலாளி குமுறுகிறான். இதுவே ஐரோப்பா கண்டத்தில் பெருந் தொல்லையாகிவிட்டது. சமீபத்தில் நடைபெற்ற தொழிளாளர் வேலை நிறுத்தமானது முதலாளிகளின் அக்கிரமத்தினால் உண்டானதே தவிர வேறல்ல. இவ்வேலை நிறுத்தம் இன்னும் சில தினங்கள் நீடித்திருக்குமாயின் அரசாங்கமே மாறியிருந்திருக்கும், அங்குதான் அப்படியென்றால் அவ்வியாதி நமது நாட்டிலும் பரவி விட்டது. இப்போது கூட, நாகபட்டணத்தில் இது விஷயமான கிளர்ச்சி ஆரம்பமாயிருக்கிறது. பொன்மலைக்குச் சகல தொழிலாளர்களும் போய்ச்சேருமுன் ஓர் பெரிய சம்பவம் நடைபெறுமென்று எதிர்பார்க்கக் கூடிய விதமாக இருக்கிறது.

ரெயில்வேயை நிர்வகிக்கும் கம்பெனியார், காசுமாத்திரம் ஒன்றுக்கு இரண்டாக உயர்த்தி பிரயாணிகளிடம் வசூல் பண்ணுகின்றனர்; பிரயாணிகளுக்கு நன்மை செய்கின்றார்களா? இல்லை. இது போலவே, ரயில்வே தொழிற் சாலைகளில் தொழிலாளிகளிடம் போதுமான படி வேலை வாங்குகின்றனர்? அவர்களுக்குச் சரியான சம்பளமும், சவுகரியமும் செய்து கொடுக்கின்றனரா? இல்லை. தாங்கள் கொழுக்கவேண்டும்; பெரிய மேடை வீடுகளில் வாசம் பண்ணவேண்டும்; வருடத்தில் சம்பளத்துடன் ஒரு மாதம் லீவ் எடுக்க வேண்டும்; தாங்கள் தான் மனித வர்க்கம். தொழிலாளரோ, மிருக வர்க்கம் போலும். இவ்வக்கிரமங்கள் உலகை விட்டுத் தொலையவேண்டியது அவசியத்திலும் அவசியமாம். இதனை இப்போதே தறித்து நொறுக்கி விடாமற்போனால், தொழிலாளர் கதி வெகு மோசமாகவே முடியுமென்பதில் சந்தேகமில்லை.

தொழிலாளர் மட்டும், உண்மையான மனதுடன் கட்டுப்பாடுடனிருந்து, சங்கங்களை உண்டாக்கி அவைகளையும் பலப்படுத்தி, ஒழுங்கான முறையில் கிளர்ச்சி செய்வார்களாயின், தெய்வ துணையும் அவர்களுக்குக் கிடைக்கும். சங்கங்களை ஸ்தாபித்துப் பத்திரிகைகளை உண்டாக்கி, அதிகாரம் செய்ததினாலேயே தொழிற்கக்ஷியினர் இங்கிலாந்தின் ஏகாதிபத்தியத்தையும் அரசாக்ஷி செய்ய வில்லையா? தொழிலாளருக்குள் இணைபிரியாத ஒற்றுமை மாத்திரம் குடி கொண்டு விட்டால், தாங்கள் நினைத்த காரியம் அநுகூலமாகாமற்போகவே போகா. மில்லுகள், தொழிற்சாலைகள், சுரங்கங்கள், போன்ற பல ஸ்தாபனங்களிலுமுள்ள, தொழிலாளர்கள் ஒன்று கூடி வேண்டுவன செய்தலே நலம். முதலாளிகளும் இவர்கள் ஒற்றுமையையும், பிரயாசையையும் கவனித்து தக்கது செய்ய முன் வருவார்கள். ஓர் தொழிலாளி.

தேவை.

நமது காரியாலயத்துக்கு மிக்க உதவியாயிருக்கக்கூடிய விதமான இரண்டு பிரயாண ஏஜண்டுகள் தேவை. இவர்கள் சொற்பத்தொகை ஜாமீனுக்கட்டக்கூடியவர்களாயிருக்கவேண்டும். தமிழ்பயிற்சியும், இங்கிலீஷ்பாஷா ஞானமும் உடையவர்களாயிருப்பின் மிக்க நலம், தாராளக்கமிஷனோ, அல்லது தக்கசம்பளமோ கொடுக்கப்படும். மற்றவிபரங்களுக்கு எழுதுக.

மானேஜர்

ஆனந்தவிஜயன், ஆபீஸ், ஈரோடு.

வெளிநாடுகளிலுள்ள இந்திய சகோதரர்கள்.

(ஜீ. ஆர். எஸ். நாயுடு எம். ஆர். ஏ. எஸ்.)

இந்தியா கற்பகத்தரு; அண்டினோரைக்காக்கும் அருட்கரம் வாய்ந்த அன்னை. நீர்வளங்களாலும், நிலவளங்களாலும் சூழப்பட்ட இந்நாட்டின் மக்கள் ஏராளமான பேர் அந்நிய நாடுகளிலும் சென்று குடியேறியிருக்கின்றனர். இவர்கள் விசேஷமாக தென் ஆப்பிரிக்கா, கெனியா, பிஜி, நியூஜீலண்டு, மலேயா, கொழும்பு போன்ற பல பிரதேசங்களிலு மிருக்கின்றார்கள். இவர்கள் சுதந்தரமில்லா நாட்டிலிருந்து சென்றவர்களான படியால், இவர்கள் எந்த நாட்டிலும் கண்ணியமாக மதிக்கப்படுவதில்லை என்பது யாவருமறிந்த விஷயம். ஜாதி மத பேத மின்றி பரிபாலனம் செய்வோமென்பது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வாக்காயிருந்த போதிலும், இவ்வேகாதிபத்தியத்தினுள்ளடங்கிய தென் ஆப்பிரிக்காவில் நம்மவர் நிலைமை எத்தகையது என்பதை வாசகர்கள் அறிந்திருப்பார்கள். அங்கு நிறவித்தியாசமொன்றினால் வெள்ளையர் மேலானவர்களாகவும், ஏனையோர் தீண்டப்படாதவர்களொப்பவும் நடத்தப்படுகின்றனர். இங்ஙனம் இவர்கள் குடியேறுவதற்கு இந்திய அரசாங்கத்தாரே காரணராவார்களெனத் தைரியமாகக் கூறுவேன். காடும், செடியுமாய் கிடந்த தரிசல் நிலங்களைத் தென் ஆப்ரிக்காவில் இந்தியரே செழிப்புள்ள பிரதேசங்களாக மாற்றினர். இதற்கு ஆதாயமாக இவர்கள் பெற்றது சொற்பக்கூலியே தவிர வேறு எவ்வித பிரயோஜனமுமில்லை.

வெளிநாடுகளிலுள்ள சகோதரர்களுக்கு மீட்சி எப்போது என்று கேட்டால், காந்தியடிகள் உட்பட தேசீய வாதிகள் யாவரும், இந்தியா சுயராஜ்யம் பெற்ற போது தான் என்கிறார்கள். இந்தியா கவர்ன்மெண்டைக் கேட்டாலோ, அவ்வமயத்திற்கு ஓர் கமிஷனை நியமித்து நம்மவர் கண்ணைத்துடைத்து விடுகின்றனர். ஒன்று தேசமக்களாவது கவனிக்கவேண்டும்; அல்லது சர்க்காராவது முயற்சி எடுக்கவேண்டும். காங்கிரஸ்தோறும் இதைப்பற்றிய தீர்மானமும் செய்யப்படுகிறது; பின்னர் மறக்கப்படுகிறது. இந்நாட்டின் விடுதலை ஏற்படும்போது தான், எங்குமுள்ள இந்தியருக்கு நற்காலமென்றால், அவ்விடுதலைக்கு விக்கினமாயுள்ளவைகளைத் தவிர்த்து யாவரும் ஒன்று கூடி சுயராஜ்யம் பெற்றாலல்லவோ சுகம். இப்போது சுயராஜ்யம் வேண்டுமென்கிறவர்கள் எத்தனை கக்ஷியாகப் பிரிந்து, என்னமாதிரி தூஷணைப்

பிரசாரத்தில் இறங்கியிருக்கின்றார்களென்பதை யாவரும் அறிவர். உண்மையிலேயே இந்நாட்டுக்கு விடுதலை தேடிக்கொடுப்பது தான் நமது கடமை என ஒவ்வொருவரும் எண்ணிவேலை செய்தால், சுயராஜ்யம் கிடையாமலா போய்விடும்?

நிற்க, வெளிநாடுகளுக்குச் செல்லும் இந்தியர்களைப் பலவாறுகப் பிரிக்கலாம், தென்னாப்பிரிக்காவில் பரம்பரையாகவே குடியேறி வசிப்பவர்கள்; இங்கிருந்து குமஸ்தாக்களாகச் சென்றவர்கள், கூலிக்காரர் எனப்பிரிக்கலாம். இதில் கூலியாள்கள் நிலைமையை வைத்தே தான் பிறரும் அளக்கப்படுகின்றார்களோ என்னமோ, ஈசனுக்கே வெளிச்சம். வெளி நாட்டில் எந்த இந்தியருக்கும், அவரவர் தகுதிக்கேற்ற கஷ்டந்தான். மலேயா, பினங், சிங்கப்பூர், முதலிய இடங்களுக்குச் செல்லும் இந்தியர்களைக் கவனிப்போம். கூலிகளாக ஒவ்வொரு கப்பலிலும் நூற்றுக்கணக்கானவர்கள் ஆண்களும், பெண்களுமாகச் செல்லுகின்றனர். இவர்களை ஊரை விட்டு நகர்த்துமுன், கொண்டு செல்லும் கங்காணியின் மோசமான வார்த்தைகளை நம்பியே செல்லுகின்றார்கள். மலேயாநாடு, பாலுந்தேனும் ஓடுகிறதேசம்; அங்கே பவுன் பவுனுகச் சம்பாதித்து பை நிறையக் கட்டிக்கொண்டு வரலாம்; கஷ்டமே கிடையாது; பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, இலவசமாகவே உண்டு. எனக்கூறலும், பாவம் அநேக ஜனங்கள் ஏமாந்து போகின்றனர். அங்கு போன பிறகு ஏற்படும் கஷ்டங்களோ சொல்லுந்தரமல்ல. பின் தம் தலைவிதியை நொந்து புலம்புகிறார்கள். ஜோகூர் சம்பவம் ஒவ்வொருவர் இருதயத்தையும் துடிக்க வைக்கக் கூடியது தானே. எத்தனையோ நம் அருமைச் சகோதரிகள் தம் அருந்தனமாகிய கற்பை அங்கு இழந்து விடுகின்றனர். இந்தத் துன்பமெல்லாம் ஒழிய வேண்டுமாயின் ஒன்று மலேயா நாட்டுக்கு ஆள் ஏற்றுமதி செய்வதை தேசாபிமானிகள் நிறுத்த முன் வர வேண்டும், அல்லது நம் சோதரர்கள் இங்ஙனம் கஷ்டப்படட்டுமென எண்ணி கடின இருதயத்துடன் இருக்க வேண்டும். இப்பிர தேசங்களில் மட்டுமல்ல; கொழும்பு, மூணார், போன்ற தோட்டப் பிரதேசங்களிலும் வெள்ளையர்களும், கங்காணிகளும், இந்தியக் கூலிகளால் கொழுத்து வாழ்ந்திருக்க, இக்கூலிகளோ, வயிற்றுக்குப் போதுமானபடி கஞ்சிகிடையாமலும், உடுக்கப்போதிய வஸ்திரமின்றியும், குடிக்க நல்ல ஜலமின்றியும் குடியிருக்க நல்ல வசதியில்லாமலும் அவஸ்தைப் படுகிறார்கள். அவர்கள் இக்கொடுமைகளையாரிடம் முறையிடக்கூடும்? அட்டைக்கடி, வெள்ளைப்பேன், போன்ற துஷ்ட ஜந்துக்கள் இவர்கள் தேகத்தை விட்டுப் பிரிவதில்லை; இக்கஷ்டங்களை வரிசையாக

"ஆனந்த விஜயன்" சஞ்சிகையில் எழுத உத்தேசித்திருக்கிறேன் நாட்டின் முற்போக்கை விரும்பும் ஒவ்வொரு தேசாபிமானியும் முதலாவதாக இவ்விஷயத்தில் ஊக்கங்காட்ட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தீண்டாமை ஒழிய

(ஒற்றுமையும், முன்னேற்றமுந் தேவை)

(எஸ். வேங்கடேச சாஸ்திரியார். எம். ஏ. எம். எல்.)

ஒற்றுமை முன்னேற்றம் என்னும் இவ்விருவார்த்தைகளும் தொடர்பானவார்த்தைகளல்ல வென்றாலும், ஒன்றுக்கொன்று சம்மந்தமான வார்த்தைகளென்று கூறலாம். ஒற்றுமை உள்ள இடத்தில் முன்னேற்றம் என்னும் இரதம் வெகுநன்றாய்ச் செல்லுமென்பதில் ஐயமில்லை. சமாதானத்துடன் செய்யும் காரியங்கள் யாவும் ஒற்றுமையையே குறிக்கும். சச்சரவென்பது அருவருக்கத்தக்கது, என்பதோடு மாத்திரமல்ல; மிகத்துவேஷமான காரிய மாம். இதனால் விளையும் தீமைகளை, எழுதப்புகின் இவ்வேட்டிலங்கா. சமாதானமின்றி சதாசச்சரவு செய்து கொண்டிருந்து கெட்டுப்போன மனிதர்கள் ஆயிரமாயிரம்; அழிந்துபோன குடும்பங்களோ பதினாயிரப்பதினாயிரம். சகல வலிமைகளும் ஒருங்கே நிறையப் பெற்ற ராஜ்யங்களானபோதிலும், சச்சரவு நேரிடுமாயின் தகர்ந்து போகின்றதை பிரத்யக்ஷமாகவும், அநுபவபூர்வமாகவும் அறிகிறோம். இதனாலன்றோ "போராடின இடம் புலியாடித்தீரும்" என ஆன்றோர் கூறியிருக்கின்றனர். எங்கு சச்சரவிருக்கின்றதோ, அங்கு ஒற்றுமையிராது; சமாதானமில்லை; ஆனந்தமில்லை; கண்ணியமில்லை; கண்ணீருங் கம்பலையுந்தான் கதியாகிறது. இவற்றை விடுத்து சமாதானத்துடன் வாழும் குடும்பங்களையும், மனிதர்களையும் கவனிப்போமாயின் என்ன நேத்ரானந்த மாயிருக்கிறது. அவர்கள் மனம் களிகூர்ந்திருக்க முகத்தில் புன்முறுவல் நர்த்தனம் செய்கின்றது. இதனாற்றான் கிறிஸ்து பெருமான் மலைப்பிரசங்கத்தில் "சமாதானமுள்ளவர்கள், பாக்கியவான்கள்" எனக்கூறியுள்ளார். சமாதானமுள்ள குடும்பங்களில் அவர்கள் தொடங்கும் எக்காரியங்களிலும் ஜெயலக்ஷ்மியாகிய ஈஸ்வரி தன் கருணை கண்ணைத் திருப்புகின்றாள். அங்குதொட்டதெல்லாம் துலங்குகிறது, ஒற்றுமையாலேயே சேர்ந்து வாழும் வலிமையும் கிடைக்க பல அரிய

காரியங்களையும் முடிக்கலாம். கவியரசராகிய சுப்பிரமணிய பாரதியாரும், ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே; நம்முள் ஒற்றுமை நீங்கிலனைவர்க்குந்தாழ்வே, நன்றிது தேர்ந்திடல் வேண்டும், இந்தஞானம் வந்தாற்பின் வேறென்னவேண்டும், என வியந்தோதியிருக்கின்றனர்.

தற்காலம் தேசம் இருக்கும் ரீதியைக் கவனியுங்கள். எங்கு பார்ப்பினும் வேற்றுமையும், சச்சரவுமாக யிருக்கின்றதேயன்றி நாட்டிற்கு நன்மை பயக்கும் விஷயமொன்றையேனுங் கண்டிலேம். இதற்குக்காரணமென்ன வென்று நினைக்கிறீர்கள். ஒற்றுமையின்மைதான். வடக்கே ஹிந்து முஸ்லீம் கலவரமென்றால், தெற்கே பிராமணர்—பிராமணரல்லாதார் சண்டை—இம்மாதிரி சண்டைகளை விடுத்து ஒற்றுமையோடு காரியங்களை நிகழ்த்துவதாயின் பாரத அன்னையின் அடிமை விலங்குகள் தானே தகர்ந்துவிடுமன்றோ.

இனி முன்னேற்றமென்பதைப்பற்றியும் சிறிது கவனிப்போம். எவ்விஷயத்திலும் முன்னேற்றமே இப்போதுவேண்டற்பாலது. கல்வி, நாகரீகம், ஆசாரம், பாஷை, விவசாயம், குலம், ராஜீயம், மதம், முதலிய யாவற்றிலும் முற்போக்கடைவதுதான் நமதுக்ண்ணோக்கமாயிருக்கவேண்டும். நமது நாட்டிலும் அநேக விஷயங்கள் முன்னேற்றம் பெற்றிருக்கின்றதானாலும், அவை மேற்போக்கான முன்னேற்றமெனக் கூறிவிடலாமேயன்றி, அடிப்படையான விஷயங்கள் பல முன்னேற்ற மடையாமலிருப்பதைக்காணலாம். உலகம் என்னும் கடலில், முன்னேற்றம் என்னும் படகை நன்மையுடன் செலுத்தி, உத்கிருஷ்டமான பாதைகள் அனைத்திலும் முன்னேற்றமடையவேண்டியதே நமது முதற் கடமையாயிருக்கவேண்டும்.

ஒற்றுமையும், முன்னேற்றமும் எங்கெங்கு உரங்கொள்ளுகிறதோ அவ்விஷயம் பெரிதானாலும், சிறிதானாலும் ஜெயமாகவே முடிகின்றது. ஓர் குடும்பத்தை மாத்திரம் எடுத்துக்கொள்ளுவோம். அவர்களுக்குள் சமாதானம் நிலவுமானால் காரியமும் நன்மையாகவே முடிகின்றது. தாய்க்கும் பிள்ளைக்கும், மனைவிக்கும் புருஷனுக்கும், சகோதரர்களுக்குள்ளும் சமாதானமின்மை இருக்குமாயின், தந்தையோர்வழி: தாயார் வேறொருவழி, பிள்ளைகள் மற்றுமொருவழியாகச் செல்ல அவர்களின் நிலைமைஎவ்வாறு இருக்குமென்பதை இங்கு விவரித்துரைக்க வேண்டியதில்லை. இது போலவே, ஓர் சங்கத்தை எடுத்

துக்கொள்வோம். அவர்களுக்குள் ஒற்றுமையின்றேல், முன்னேற்ற மென்பது கிடைக்கவேமாட்டாது. தலைவர் ஒரு விஷயத்தைப்பற்றிச் சொல்லுவார்; காரியதரிசி அதைக்கவனியாமல் தம் மனம் போல் ஓர் காரியத்தைச் செய்வார். பொக்கிஷதார் யாருக்குப்பணம் கொடுப்பதெனத் திகைப்பார்; மெம்பர்கள் சண்டப்பிரசண்டம் பண்ணுவார்கள். இதனால் அச்சங்கம் என்ன நோக்கத்தைக் குறித்து ஆரம்பிக்கப்பட்டதோ, அந்நோக்கம் சித்தி பெறாது, சங்கம் சங்கடத்திலேயே முடிகின்றது. ஒற்றுமையும், முன்னேற்றமும், இணைபிரியாது உறவாடுவதற்கு என்னென்ன சாதனங்களுண்டோ, அவைகளைக்கண்டு பிடித்து அதன்வழி செல்லுதலே புத்திசாலித்தனமென்பதுடன், காரிய அநுகூலத்திற்கும் வழி ஏற்படும்.

ஆதிதிராவிட சகோதரர்களே, ஏனையோர் விஷயங்களைப் பார்க்கிலும் உங்கள் விஷயமே மிகக்கவனிக்கப்படவேண்டியதாகும். நீங்கள் பகுத்தறிவுடைய மனிதர்களாயிருந்தும், ஏனையோரைப் போலவே சுக துக்கங்களை அனுபவிக்கின்றனவர்களாயிருந்தும் உங்களை ஒதுக்கப்பட்டவர்களாக வைத்து விடுவதற்குக் காரணமென்னவென்று நினைக்கிறீர்கள்? உங்களிடம் போதுமான செல்வமிருக்கின்றது; உழைப்பிருக்கின்றது; அப்படியிருந்தும் ஒற்றுமையில்லை. ஒற்றுமையின்மையால் சமாதானமில்லை; ஒற்றுமையின்மையால் முன்னேற்றமில்லை; முன்னேற்றத்திற்கு அத்யாவசியமான சாதனங்களாகிய கல்வி நாகரீகம் இவைகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை. ஏனையமரபினர் தங்களை நன்குணர்ந்துகொண்டனர்; அவர்களுக்குள் ஒற்றுமை உண்டாகிவிட்டதால் மகாநாடுகள் கூடி சங்கங்கள் நிருமாணித்து இவைகளின் வேலைகளை ஒழுங்காய் நடத்தவும், பிரசாரம் செய்யவும் உற்ற துணையாகப் பத்திரிகைகளும் உண்டாக்கிக் கொண்டனர். அவர்களுடைய ஒற்றுமையால் பிறரால் மதிக்கப்பட்டு வரவரப் படிப்படியாக முன்னேற்றமடைந்து சமத்வநிலையை எய்திருக்கின்றார்கள். இங்ஙனம் மற்றவர்கள் வேலைசெய்யும்போது நீங்கள் மாத்திரம் நிர்விசாரிகளாயிருப்பதை என்னென்று கூறுவது? உங்களுக்கு ஞானசூரியன் உதயமாகவேண்டுமாயின் அதற்கு அடிப்படையாக ஒற்றுமை என்னும் சாதனத்தைப் பலப்படுத்திக் கொள்ளுங்கள்.

ஆதிதிராவிட சகோதரர்கள் வசிக்கும் சேரிகளைச்சென்று பார்வையிடுவோமானால் உண்மைத் தேசாபிமானியின் மனம் துடிக்குமென்பதில் ஐயமில்லை. அவர்கள் மனிதர்களாயிருந்தும்

ஊருக்குப் புறம்பே ஒதுக்கப்பட்டிருக்கின்றனர். அங்கு சிறுசிறு குடிசைகளில் காற்றோட்டமின்றி ஒரே அறையில் சமையல் செய்வதும், அடுத்தாற்போலவே தாங்கள் படுத்துக்கொள்வதும், இன்னுமொருபக்கம் அதே அறை அறையில் நாய் கோழி இவைகளிருப்பதும், ஆண்களும் பெண்களும் அல்லோலகல்லோலமாகப் பேசிக்கொள்வதும் வெறுப்பைத் தருகின்றன. இவர்களைக் கவனிக்கும் தேசாபிமானிகள் பேசுகின்றார்களேயன்றி, இவர்களிருக்கும் சேரிகளுக்குச் சென்று அங்குசில நாளேனும் தாமதித்து அவர்களுடைய குறையை நிவர்த்திசெய்ய முற்படுவார்களாயின் எவ்வளவோ நன்மையாயிருக்கும். அவர்கள் அடிமைகளுக்கொப்ப வாழுகின்றார்கள். ஆதிதிராவிடர்களுக்குள் இரண்டொருவர் கல்விகற்றுவிட்டதாலும், சிலர் சட்டசபை மெம்பர்களாகி விட்டதினாலும், வேறுபலர் பணக்காரராகி விட்டதினாலும், எவ்வித நலனும் விளைந்து விடப்போவதில்லை. பெரும்பான்மையான சகோதரர்களின் மீட்சி ஏற்படவேண்டும். அவர்களைக்காணும் ஒவ்வொருவரின் மனமும் இளகி உருகிவோட வேண்டும். நமது தேசத்திலுள்ள சகோதரர்கள் இத்தகைய நிலைமையிலிருக்கும்போது, நாம் மேற்பூச்சாகசுயராஜ்யத்துக்கும் போராடுவதை ஆக்ஷேபிக்கின்றேன். சுயராஜ்யப்போராட்டத்தின் அம்சங்களில் தீண்டாமையும் ஒன்று எனச்சிலர் சமாதானம் கூற முன் வரலாம். நிர்மாணத்திட்டங்களிலொன்றாகிய தீண்டாமையை மட்டும் பிரசாரத்துக்கெனக் கொண்டு எங்கெங்கு வேலை செய்யப்பட்டிருக்கின்றது எனக் கேட்கிறோம். இரண்டொரு தேசாபிமானிகள் தம் இல்லத்தில் மட்டும் ஆதிதிராவிடர்களுக்குச் சமத்வம் கொடுத்து விட்டதினால் தேசமெல்லாம் புனருத்தாரணம் அடைந்து விட்டதென எண்ணமா? ஓர் சமயம் சுயராஜ்யம் பெற்றபின் இவர்களுக்குச் சமத்வம் அளித்துவிடலாம் எனச்சிலர் கூறுவர். இது விவாதத்துக்குப் பொருந்தாததேயாகும். அந்நிய அரசாக்ஷியிலேயே நாம் இவர்களை இந்த ஸ்திதியில் வைத்திருக்கின்றோம். நாமே அரசாக்ஷி பெற்று விட்டால் இவர்களைக் கவனிப்பது குதிரைக்கொம்பு போற்தான். முதலாவது செய்யவேண்டியது எதுவோ அதனைச் செய்ய முற்படுதல் நலம். இந்தியாவின் ஜீவாதாரமானவர்களாகிய ஆதிதிராவிடர்களை கவனித்துத் தீண்டாமையையொழித்து சமத்வம், சகோதரத்வம், சுதந்தரம் என்னும் அரிய சாதனங்களைத் தாராளமாய்ப் பகிர்ந்து, அவர்களை முன்னுக்குக் கொண்டுவர ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கின்றனர்.

நமது தேசத்தில் சுமார் ஆறரைக் கோடிப்பேர் தீண்டாதவர்களென ஒதுக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களுக்குச் சமத்வம் வழக்கவேண்டியது அவசியம். தீண்டாதவர்களென புறக்கணிக்கப் படுவோரும், பாரதத்தாயின் வயிற்றிற் பிறந்த சகோதரர்களே யாவர். லாபநஷ்டங்களோ, சுகதுக்கங்களோ, வேறு சகல விஷயங்களிலும் ஜாதி இந்துக்களுக்கும், இவர்களுக்கும் எவ்வித வேற்றுமையுமிருப்பதாக தெரியவில்லை. நமது சகோதரர்களில் ஒரு சாராரைத் தொடக்கூடாதென்றும், இன்னும் சிலரைக் கண்ணாலேயே பார்க்கக்கூடா தென்றும், ஒதுக்கி வைத்திருப்பது நமக்கே வெட்கமாயில்லையா? இது ஒரு கௌரவமா? சிறிது சிந்தித்துப் பார்ப்பின் உண்மை நிலை விளங்காமற்போகாது. நம் தேசவாசிகள்—இந்தியர்—நம் சகோதரர்கள், ஒடுக்கப் பட்டவர்கள், தீண்டப்படாதவர்கள், காணப்படக்கூடாதவர்கள் என இருப்பது மிகவும் பரிதபிக்கத்தக்க காரியமாம்.

தீண்டப்படாதவர்களின் க்ஷேமத்தைப் பெரிதும் ஆதிமுதல் கவனித்தவர்கள் கிறிஸ்துவ மிஷனெரிகளே யாகும், இவர்களோடு நெருங்கிப்பழகி, இவர்களை ஆதரித்து, இவர்களுடைய முற்போக்குயாவையும் கவனித்து, கல்வியையூட்டி, பரிபாலித்த புண்ணியம் மிஷனெரிகளைச் சார்ந்தது. திசைதெரியாது திண்டாடித்தவிக்கும் பிரயாணி ஒருவனுக்கு, அர்த்தராத்திரியில் நடுச் சமுத்திரத்தில், படகு ஒன்று கிடைத்தால் எவ்வாறு சந்தோஷப்படுவானோ அவ்விதமே ஆதிதிராவிடர்களும் மிஷனெரிகளால் சந்தோஷமடையும்படி செய்யப்பட்டனர். இன்னும் மிஷனெரிகள் ஆதிதிராவிடர்பால் பரிந்தே வேலைசெய்கின்றனர். பள்ளிக்கூடங்களில் ஏனைய ஜாதி பையன்களுடன் இவர்களும் படிக்கும்படி விடப்பட்டிருக்கின்றார்கள். கிறிஸ்துமார்க்கத்தில் தேவ ஊழியங்களுக்கென்றும், இவ்வகையறுக்கள் தக்க சம்பளத்தில் நியமிக்கப்படுகின்றனர். இவ்வித சிலாக்யத்தால் ஆயிரக்கணக்கான ஆதிதிராவிடர்கள் சிறிது நன்னிலைமையிலிருக்கின்றதை நானறிவேன். ஓர் ஜாதியாருக்கு சமத்வம் அளிக்கின்றோமென்றால், அதற்கு வழி இதுவேயாகும். இவ்வமயம் வேண்டியது வாய்ப்பந்தலன்று, செய்கையேயாகும். அநேக ராஜீயவாதிகள் இடைவிடாது தீண்டாமையை யொழிக்கவேண்டுமெனப் பேசியும், எழுதியும் வருகின்றார்களென்றாலும் சிலர் மாத்திரமே அனுஷ்டானத்தில் அவைகளைக்காட்டுகின்றனர். ஒரு ஆச்சாரியாரும் இரண்டொரு ஐயரும், சில நாயுடுகளும், சில வேளாளரும் தீண்டாமையை ஒழித்து விட்டதால் மாத்திரம் கோரிய பலன் கிட்டிவிடாது. ராஜீயவாதிகள் யாவரும், காங்கிரஸ் அங்க

த்தினர் ஒவ்வொருவரும் தம்செய்கையில் இவற்றைக் காட்ட வேண்டும்.

தீண்டாமையை ஒழிக்கவேண்டுமாயின், இதற்காக அன்னவர்களுடன் சம்மந்தம் வைத்துக்கொள்ள வேண்டுமென்றாவது, அவர்களுடன் பந்திபோஜனஞ்செய்ய வேண்டுமென்றாவது, அவரவர் ஜாதியாசாரத்தை விட்டு விட வேண்டுமென்றாவது வற்புறுத்த மாட்டேன். உடனே இவ்விதம் செய்ய ஆரம்பித்தால் பலமான தொந்தரவுகள் நேரிடும். அப்போது நமது மனம் வேதனைப்பட, பிரசாரமும் நின்று போகவழியாயிருக்கும். செய்யவேண்டிதெல்லாம், தீண்டாமை என்னும் பந்தனத்தை அறுத்து அவர்களுக்கு சமத்வம் வழங்கிவிட வேண்டியது ஒன்றே அவர்களுடன் தாராளமாக நெருங்கிப்பழகுதல், அவர்களுக்கு இடைஞ்சல் நேரிடும் போது பரிவுடன் உபசரித்தல், சிலவைத்தியஞ்செய்தல், குளங்குட்டைகள், கிணறுகள்; தெருக்கள் யாவிலும் அவர்களை சரி சமானமாக இருக்கும்படி செய்தல் முதலியவைகளே போதுமென்பது என்னுடைய சொந்த அபிப்பிராயமாகும்.

பல ஊர்களிலும், விசேஷமாக கிராமாந்தரங்களிலும் இவர்களின்நிலைமை மிகவும் பரிதபிக்கத்தக்கதாகவே யிருக்கிறது. பொதுச்சாவடி, நீர்நிலையங்கள், தெருக்கள் இவைகளில் இவர்கள் செல்லலாகாதெனக் கண்டிப்பாக விலக்கப்பட்டிருக்கின்றனர். பட்டணங்களில் ஒருவாறு தீண்டாமையின் வேகம் தணிந்து வருகின்றதாகையால், இப்போதுவேலை செய்யவேண்டியது முக்கியமாக கிராமங்களிலேயேயாகும். எவ்வேலையும் பட்டண வாசங்களில் செய்யப்படுகின்றதேயொழிய, கிராமங்களில் செய்யப்படுகிறதில்லை. இதனாலேயே எடுத்தகாரியம் இடையூறுடன் முடிகின்றது. பட்டணங்களைப்பார்க்கிலும், கிராமங்களே அதிகமானபடியாலும், கிராமங்களிலேயே, விவசாயிகள், நெசவுக்காரர், பெருத்திருக்கின்றபடியாலும் கிராமங்களில் தக்க வேலை செய்யப்படவேண்டும்.

இதனைக்கண்ணுரும், சகலகனவான்களும், தங்களால் இயன்றமட்டிலும், தினம் ஒரு மணிநேரமாவது தங்கள் இடங்களில் தீண்டாமைப் பிரசாரம் செய்ய முன்வருவார்களாயின், இத்தேசத்தைப்பிடித்துள்ள சாபத்தீட்டு சூரியனைக் கண்டபனி போல் மறைந்துபோக, சுதந்தரதேவி பிரசன்னமாகி இந்நாட்டைப்பரிபாலிப்பாள். அவ்வாறே கிருபை செய்ய பகவானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆன்ம ஸ்வதந்தரம்.

(ஸ்ரீமான் எஸ். டி. சுப்பிரமணிய யோகி)

மனிதனை, ஏன் மனிதவர்க்கத்தையே ஒருபேய் பிடித்திருக்கிறது. ஒரு பெருஞ்சாபம் அவனைப்பிடித்திருக்கிறது. அவன் தனது மூடத்தனத்தால் தனது கைகளாலேயே தானே, தனது கண்களை மூடிக்கொண்டு குருடனாகிவிட்டான். ஒரு பெரிய அந்தகாரம் அவனைக் கவிழ்ந்துகொண்டிருக்கிறது. அப்படி யிப்படி அசைய முடியாதபடி தன் காலுக்கு தானே தனது சொந்தக் கைகளாற் செய்த விலங்கை மாட்டிக்கொண்டு விட்டான். தான் ஏற்படுத்திய பழக்கவழக்கக் கோட்டைக்குள் தானே சிறையிலிருக்கிறான். எங்கு பார்த்தாலும் துக்கம், தொல்லை, தோல்வி, வீழ்ச்சி, மோசம், அழிவு முதலிய பெரும் அரக்கர்கள் இவனை விழுங்கிவிட ஆவலாய் வாயைத்திறந்துகொண்டிருக்கின்றனர். இப்பொழுது கதறுகின்றான்! இன்பமெங்கே என்று ஏங்குகின்றான்! வெம்புகின்றான்; புழுங்குகின்றான்; வெதும்புகின்றான்; பொருமுகின்றான்; முட்டிக்கொள்கின்றான்; மோதிக்கொள்கின்றான்; தலைவிதி என்று தலையிலடித்துக்கொள்கின்றான்; தெய்வத்தை நிந்திக்கின்றான்; உலகத்தை வெறுக்கின்றான்; பழமையைக்கண்டு போற்றுகின்றான்; புதுமையைக் கண்டு பயந்தோடுகின்றான். சிறிது காலஞ் செல்கின்றது. இம்மனக்கொதிப்பு-அசாத்தியமனப்பசி—இக்கொடூரகொந்தளிப்பு அதுவும் அடங்கிவிடுகின்றது. பிறகு மலத்திலேயே பிறந்து, மலத்தையே தின்று, மலத்திலேயே புரளும் பன்றியைப்போல், உலகச் சிறுபோகங்களிலே—உணவிலே—உறக்கத்திலே—காமத்திலே காலத்தைக் கழிக்கின்றான். பிறகு ஐயோ! இறுதியில் இந்நடைப்பிணம் நிஜப்பிணமாகி விடுகிறது. ஐயோ! மனிதனே—சிருட்டியின் தலைவனே—கடவுளின் ரூபமே (விவிலிய வேதம்) இதுவா உனது தலைவிதி! அந்தோ! பாவம்!

மனிதனே கொஞ்சநேரம் யோனைசெய்! சிறிது காலம் சிந்தித்துப்பார். உன் வாழ்க்கை சரியானதா? வீணாகக் கடவுளை வையாதே; உன் மூடத்தனம், உனது ஆசை, முதலியவைகளை நிந்தனை செய்; மற்ற ஜீவராசிகளைப் பார்; அவைகள் எப்படி வாழ்கின்கின்றன; நீ எப்படி வாழ்கின்றாய்; ஒப்பிட்டு நோக்கு. பறவைகளுக்குக் கவலைகளுண்டா? விலங்கினம் அழுகின்றதா? மரங்கள் வேலை செய்யக்காணோமே. ஒரு வானம்பாடியை எடுத்துக்கொள்; அது பறந்து, திரிந்து, பாடியாடிக் களித்துக் குதிக்கின்றது. அது சென்றதைப்பற்றிச் சிந்திப்பதில்லை; வருவதைப் பற்றி வருந்துவதில்லை; இதுவன்றோ வாழ்க்கையின்பம்:

இதுவன்றோ தெய்வலோகம்; அது தன்னை நம்புகின்றது; தனது சக்தியில் நம்புகின்றது; அமுதம் அதன் வாயினின்று வெளி வருகின்றது. ஆனால் நீ யெவ்வாறு வாழ்கின்றாய்? ஐயோ! பாழாய்ப் போன கவலைகளுனக்கு மாத்திரமா? இயற்கைத் தாய்க்கு நீ யாது குற்றம் புரிந்தாய்? ஆனால் நீ வாழ்வது தப்பு வழியா? இயற்கைத் தாய்க்கு எதிரிடையாகச் செல்லுகின்றாய். கடவுள் இன்பத்தையே எங்கும் நிறைத்திருக்கிறார். அவர் சிருட்டி முழுவதும் அமுதம் பிலிற்றுகின்றது. ஆனால் அவர் உனக்குக் கொடுத்த பொருள்களை நீ சரியானபடி உபயோகிப்பதில்லை. நீ உன்னை நம்புவதில்லை; உனக்குச் சக்தியில்லை; ஆண்மையில்லை; வீரமில்லை; தீரமில்லை; கடவுள் உன்னுள்ளும் வியாபித்திருக்கிறார். அவரையே நீ நம்புவதில்லை; உனது சக்தியில் உனக்கு நம்பிக்கையில்லை. ஹே! பயங்காளி! என்ன காரியம் செய்யப் புகுந்தாய்? சேற்றில் நெளியும்புழுவைப்போல் சிறுமையிலே, வறுமையிலே, நலிவினிலே, கலியினிலே, துன்பத்தில் துக்கப்பட்டு அழிகின்றாய்; கண்ணை விழித்துப்பார்; இயற்கையைத் தழுவிக்கொள்; உனக்குள்ளிருக்கும்—புதைந்து கிடக்கும் இரத்னத்தை வெளிப்படுத்து; மோக்ஷமென்பது விடுதலை.

நீதானே பணத்தை உண்டாக்கினாய்; அதற்கு யார்இப்பொழுது அடிமையாயிருப்பது? அதுவும் நீதானே; ஜாதி உன்னைக் கட்டுப்படுத்தலாம்; நீ அதைக்கட்டுவையா? சமூகமெவ்வழி நீயுமவ்வழியன்றோ. நின்வழியைச்சமூகம் கொள்ளட்டுமே. பணம் உனக்காகவா; நீ பணத்திற்காவா; ஜாதிக்குள் நீயா? உனக்குள் ஜாதியா? சமுகம் உனதா? நீ சமூகத்தின் சொத்தா? உனக்கு ஒன்றும் சொந்தமில்லை; ஆனால் நீ எல்லாவற்றிற்கும் சொந்தம். உனக்கு ஒன்றின்மேலும் அதிகாரமில்லை. ஆனால் எல்லாவற்றிற்கும் உன்மேல் அதிகாரமுண்டு. நீ அடிமை, மானமில்லாதவன், வெட்கமில்லாதவன், எடுப்பார் கைப்பிள்ளையாய், புழுவாய், வாழுகின்றாய். இதைவிட்டுப் பருந்தாய், குயிலாய், ஆண் சிங்கமாய், பெண்புலியாய் ஏன் திரும்பக்கூடாது? சட்டங்களும் கட்டுப்பாடுகளும், உனக்காகவே; நீ அவைகட்காக அல்ல; அவைகளை உதறிபெறி. உன்மனச்சாட்சி,உள்ளுணர்வு ஏன் ஒரே வார்த்தையில் உன்னுள் எங்கேயோ யிருக்கும். "நீ" உனது அதிகாரத்தை கம்பீர தொனியை வெளிப்படுத்து "நானே எனக்குத் தலைவன்" "நானே எனக்குத்தலைவன்" என்று உனது உரத்தசப்தத்தினுச்சியில் கூவி உலகத்திற்கறிவி. புத்தகங்களும் ஆசாரங்களும், பெரியவர்க்கத்தினரும், மஹான்களும் உனக்கு வழிகாட்டிகளே; அதிகாரிகளல்ல. உன்னதமானவன் நீயே ஒன்றும் பொருள். மற்றவையிரண்டாந்தரமே.

நீ கோழையாய்-அடிமையாய்ப் பயங்காளியாயிருக்கும் வரையில் உனக்குச் சுகம் கிடையாது. மஹான்கள், பெரியோர்கள்-சுவாமிகள் என்பவர்களின் வாழ்க்கையைப்பார்; அவர்களும் மனிதர்களே; தேவலோகத்திலிருந்து திடுமென அவர்கள் குதித்துவிடவில்லை. ஆனால் அவர்கள் மனிததேவர்களானதின் காரணம் அவர்களே. கடவுள் உனக்கென்றும் அவர்களுக்கென்றும் தனியானவிதிகள் ஏற்படுத்தவில்லை. எல்லோருக்கும் ஏன் எல்லா ஜீவராசிகளுக்கும் பொதுவாய் அவர் ஒரே ஒரு விதி-இயற்கைக்கட்டுப்பாடு ஏற்படுதியிருக்கிறார். அவர்கள் அவற்றைக் கடப்பதில்லை; நீ யவற்றைக் கடந்துவிடுகிறாய். மற்றொன்று அவர்கள் அவர்களின் தலைவர்களாயிருக்கின்றனர். புத்தர், கிருஸ்த்து, மஹமத், சங்கரர் முதலியோரின் வாக்யங்களில் ஒரு அதிகாரத்வனி ஒலிக்கின்றது. அவர்கள் வார்த்தையில் யுக்தி, ஞானம் கிடையாது. அவர்கள் நேருக்கு நேரே தாங்கள் கண்டதை ஆத்மனுக்குக்கூறுகின்றார்கள், நீ,நீயேபயப்படுகின்ற உனது எண்ணத்தை-அது சிலருக்கு எதிராகயிருந்தால் ஜாதிக்குப்புறம்பாயிருந்தால்-இம்மாதிரி எவ்வித "ஆணு"க்கட்டுப்பட்டிருந்தாலும் சரி, வெளியில் கூற அஞ்சுகிறாய். அம்மாதிரி நடக்கமுயல்வதில்லை. நீ இவ்வாறு வாழும்வரையில் உனக்கு இம்மைச்சுகமும், மறுமைச்சுகமும் கிடையாது. உன்னால் ஒன்றும் செய்ய முடியாது. உனக்குச் சக்தியின் அருளில்லை.

ஆதலால் புதல்வா! இன்றுமுதல் ஜாக்கிரதையாயிரு. "தஸ்மாத் ஜாக்ரதா! ஜாக்ரதா" என்பதை ஞாபகத்துள்வைத்துக்கொள். உன்னைநம்பி உலகப்பொருளை அனுபவி; முதல் முதல் உபதேசம்- பரமார்த்திகர்த்திலாயினுஞ்சரி, வியவகாரத்திலாயினுஞ்சரி உன்னைநம்பு. இரண்டாவது இயற்கையின் வழியே இயற்கையை அனுபவி அப்பொழுதே நீ அமரனாகிறாய். உனக்கு தொல்லையில்லை; தோல்வியில்லை; வீழ்ச்சியில்லை; சாவில்லை இராமலிங்கசுவாமிகள் பாடுகிறார்

கையறவில்லாத பாட்டு

கையறவில்லாத நடு கண் புருவப்பூட்டு
கண்டுகளிகொண்டுதிறந்துண்டு நடு நாட்டு
ஐயர்மிக உய்யும் வகையப்பர்விளையாட்டு
ஆடுவதென்றே மறைகள்பாடுவது பாட்டு-

சிற்சபையும் பொற்சபையும் சொந்தமெனலாச்சு
தேவர்களும் முனிவர்களும் பேசுவதென் பேச்சு
இச்சமய வாழ்வினெனக் கென்னையினையேச்சு
என் பிறவித்துன்பமெலாமின்றோடே போச்சு.

பொது சமாசாரங்கள்.

சென்னை சட்டசபைத்தேர்தல் நவம்பர் மீ 8-ந்தேதி நடத்தப்படும் எனத்தெரிகிறது.

*　　　*　　　*

1926-ம் வருடத்திய தேசீய காங்கிரஸ் அசாமில் நடைபெறப்போகிறது. இதற்குச் சென்னை ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் அக்ராசனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்.

*　　　*　　　*

லண்டன் 'டெயிலிநியூஸ்' பத்திரிகையின் பாரிஸ் நிருபர் அனுப்பியுள்ள செய்திப்படி, அமெரிக்கா கோடீஸ்வரரான மிஸ்டர். ஹென்றி போர்டின் புத்திரிக்கும், போலண்டு தேசமாஜிமந்திரி மிஸ்டர். ஸ்கிவின்ஸ் என்பவருக்கும் விவாகம் நிச்சயமாயிருக்கிறது. விவாக சமயத்தில் உலகத்திலேயே இதுவரை கேள்விப்பட்டிராதபடி 6 கோடிபவுன் பெண்ணுக்குச் சீதனமாகக் கொடுக்க மிஸ்டர். ஹென்றிபோர்டு தீர்மானித்திருக்கிறார்.

*　　　*　　　*

தென்மேற்கு ஆப்பிரிக்காவில் புதிய தங்கவயல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாயும், அதில் மிக அதிக செல்வமிருக்கின்றதென்றும் தெரிகிறது.

*　　　*　　　*

வங்காளத்தில் க்ஷயரோக நோயால் மட்டும் மணிக்குப் பன்னிரண்டு பேர்வீதம் மாண்டுகொண்டிருக்கிறார்களாம். போதுமான ஆகாரமும், சரியான இடவசதிகளும் கிடையாமையே இந்த அநியாயத்திற்குக்காரணம்.

*　　　*　　　*

சகாராபாலைவனத்தில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறைதான் மழை பெய்கிறதாம்.

*　　　*　　　*

சூரியனைவிட ஒரு கோடிமடங்கு ஒளிமிகுந்ததென்று கருதப்படும் ஒருபுதிய நட்சத்திரம் இப்பொழுது வானத்தில் தோன்றியிருக்கிறதாம்.

*　　　*　　　*

கெயிரோவில் இருக்கும் துருக்கி மாஜி சுல்தானின் மனைவியார் தனது நஷ்டத்தை முடிவு செய்யுமாறு சில தினங்குகளுக்குமுன் நீல நதியிற் குதித்தார். ஆனால் அவரைத்தூக்கிவிட்டார்கள். சென்ற மூன்று மாதங்களாக அவருக்கு அங்கோராவிலிருந்து பென்ஷன் வராமையால், அவர் இப்பொழுது ஒரு தருமசாலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

*　　　*　　　*

ரிப்புகளின் தலைவராகவிளங்கி உலகம் போற்றுமாறு போர்புரிந்த வீரர் அப்துல்கரீம் இப்பொழுது தமது தனிவாசத்துக்குப் புறப்பட்டு மனைவி மக்களுடன் நடுக்கடலில் யாத்திரை செய்கிறார். சென்ற பத்து வாரங்களுக்கிடையில் அவர் தலையில் நரைதோன்றிவிட்டதாம். ஐரோப்பிய மகாயுத்தம் தோன்றிய சில தினங்களிலேயே பிரிட்டிஷ்மந்திரிகள் சிலரின் தலையில் நரைதோன்றியதாகப் பத்திரிகைள் வெளியிட்டன.

*　　　*　　　*

மைசூர் அரசாங்கத்தார் பட்டினத்தில் நூல் நூற்பதை ஆதரிக்கும் பொருட்டு 4500 ரூபாய் உத்திரவு செய்திருக்கிறார்கள்.

* * *

பரோடாமன்னர் இப்பொழுது நோய்ப்பட்டு ஐரோப்பாவில் இருப்பதால் அரசகாரியங்களை இப்பொழுது அரசியே மேற்பார்த்து வருகின்றாராம். பரோடா அரசி சிறந்த அறிவாளி.

* * *

சீமையில் மறதிமிகுந்த ஒரு பாதிரியார் ரயில் வண்டியில் போய்க் கொண்டிருந்த பொழுது டிக்கட்கலெக்டர் வந்து டிக்கட்கேட்டார். தேடிப்பார்த்துக்காணாமல், அது தொலைந்துபோய் விட்டதென்று பாதிரியார் சொன்னார். பரவாயில்லை; எங்களுக்குத் தங்களைத் தெரியும் என்று டிக்கட் கலெக்டர் சொல்லிவிட்டார். ஆனால். டிக்கட் இல்லாவிட்டால் நான் எந்த ஊருக்குப் போகிறதென்றும் எனக்குத் தெரியாதே என்று பாதிரியார் விழித்தார்.

* * *

அமெரிக்காவில் ஒரு பேர்போன நடனமாது பன்னிரண்டு மாதங்களுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டு ஒரு கணவனைத் தேர்ந்தெடுத்திருக்கிறாள். அந்த காலத்தில் அவள் இல்லற வாழ்வு திருப்தியாயிருந்தால் கலியாணத்தை உறுதி செய்து கொள்ளுவாள், இல்லாவிட்டால் ரத்து செய்து விடுவாளாம்.

* * *

இங்கிலாந்தில் ஸ்பிரிங்பீல்டு என்றும் இடத்தில் மாதர்கள் தாங்களாகவே ஆண்களின் துணையின்றி ஒரு குடியிருப்பை நடத்திவருகிறார்கள். பாற்பண்ணை, முயல், நாய், கோழி முதலியன வளர்த்தல், காய்கறி பயிரிடுதல் முதலிய தொழில்களைச் செய்கின்றனர். ஆனால் சில முரட்டு வேலைகளுக்கு, ஆண் மக்கள் வேண்டுமென்று கண்டு சில ஆண்களைத் தங்கள் கூட்டத்திற் சேர்த்துக்கொண்டார்கள். மாதர்கள் ஆதிக்கத்தில் தலையிடுவதில்லை யென்று உறுதியளித்த பின்னரே அந்த ஆண்களைச் சேர்த்துக் கொண்டனராம்.

* * *

டென்மார்க்கில் விளையும் தானியங்களில், பிரஜைகளுக்கு வேண்டியது போக மீதியை மாடுகளுக்கும், மற்ற மிருகங்களுக்கும் போடுவார்களே தவிர, வெளிநாட்டுக் கனுப்ப மாட்டார்கள். இதினால் தான் மாடுகள் அங்கே கொழுத்து ஏராளமான பாலைக் கொடுக்கின்றனவாம்.

* * *

ஜப்பானில் வெள்ளப் பிரளயத்தால் அதிகச்சேதம்: தக்ஷிண கொரியாவில் கடல் பொங்கி 3 கிராமங்கள் அழிந்து போக அநேக உயிர்சேதம்; பொருட் சேதம்; இங்கிலாந்தில் பூகம்பம் உண்டாகி கொஞ்சம் சேதம்; இங்கிலீஷ் கால்வாயில் பூகம்பம் ஏற்பட்டு கரையோரமுள்ள கட்டடங்கள் அதிர்ந்து பெரிய வீட்டுச் சுவர்க்ள் பிளந்து போயின.

* * *

நன்றாய் வளர்ந்த முத்துச் சிப்பி ஒன்று 90 லட்சம் முட்டையிடுமாம்.

* * *

நியூகயாஞவிலிருக்கும் ஒரு வகை எலி தன் வாலைக் கடலில் விட்டு தூண்டில் போல உபயோகித்து மீன் பிடிக்கிறதாம்.

* * *

தஞ்சையிலுள்ள முக்கிய தெருக்களில் மின்சார விளக்குகள் போடு வதென்று நகர சபையார் தீர்மானம் செய்திருக்கின்றனர்.

* * *

கோயமுத்தூர் ஜெனரல் ஆஸ்பத்திரியில் எக்ஸ்ரே என்னும் கருவியை வைக்கக் கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

* * *

ஜப்பானில் வெளியாகும் "ஆஸாகி" என்னும் தினசரிப் பத்திரிகைக்கு 21,20,000 சந்தாதாரர்களும், இங்கிலாந்திலிருக்கும் "டெயிலி மெயில், "டெயிலி எக்ஸ்பிரஸ்" என்னும் பத்திரிகைகளுக்குப் பத்து லட்சம் சந்தாதாரர்களும், குறைந்த சந்தாதாரர்கள் உள்ள "டெயிலி ஹெரால்டு" பத்திரிகைக்குக்கூட 3 லட்சம் சந்தாதாரர்களும் இருக்கின்றார்களெனத் தெரிகின்றது.

* * *

சேலத்தில் தண்ணீர்ப் பஞ்சம் அதிகமாயிருப்பதால் ஜனங்கள் தண்ணீர் வரிகொடுக்க மறுக்கப் போகின்றனாராம்.

* * *

பத்திராதிபர் குறிப்புகள்.

நமது வந்தனம். திருவருட் கிருபையே தமியேனைத் தடுத்தாட்கொண்டு, தேசத்திற்கென உழைக்க எம்மனதைத் தூண்டிற்று. டாக்டர் நாயர் பெருமான், ஸர். பி. டி. செட்டியார் போன்ற அருந்தலைவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றியே பொதுஜன சேவையிலிறங்கினேம். அப்போது முதற்கொண்டே தமிழர் உரிமையைப் பாதுகாக்க வெண்ணி, திருநெல்வேலி இராமநாதபுரம் ஜில்லாக்களில் நூற்றுக்கணக்கான சங்கங்களை ஸ்தாபித்துப் பிரசாரம் செய்தும், திராவிடன் பத்திரிகை வாயிலான் தேசப் பணிபுரிந்தும் வேலை செய்து வருங்காலத்தில், காந்தியடிகளின் சிறைவாசத்திற்குப்பின் ஒத்துழையாமையை மேற்கொண்டு, காங்கிரசில் சேர்ந்து தமிழ்நாடு, கொங்கு வேளாள மித்திரன், தாய் நாடு,குடி அரசு, முதலிய பத்திரிகைகளின் நிர்வாகிகளுடனிருந்து தேசப் பணிசெய்தும், அவகாசமான வேளையில் பல பத்திரிகைகளுக்கு வியாசங்கள் எழுதியும், விசேஷமாக ஒடுக்கப்பட்டவர்கள் நன்மையைக் கருதியும் சேவை செய்யலா

னோம். இப்போதோ, வேறு எவரின் கீழிருந்தும் தேசசேவை செய்யாது, சுயேச்சையுடனிருந்து எம் நாட்டுக்கு ஊழியம் செய்வான் வேண்டி, இம்மாசிகையை நடத்த முன் வந்துள்ளோம். இவ்விபரத்தைச் சிலருக்குத் தெரிவிக்க, அனைவரும் எம்மை ஆசீர்வதித்தும், எம்மை ஊக்கியும் எழுதியிருக்கின்றனர். இவர்கள் யாவருடையவும் புகழ்ச்சிக்கு நாம் பாத்திரமல்லவென்பதே எமது கருத்து. எனினும், அவைகளை, அவர்கள் எம்மீது கொண்ட அன்பின் முறையால் எழுதப்பட்டது என எண்ணி ஏற்றுக்கொள்கிறோம். அநேகர் எமது சேவை எவ்விதமிருக்குமெனக் கேட்கின்றனர். அவர்களுக்கொருவார்த்தை. நமது மனச் சான்று வழிநின்று தேச சேவை செய்வதே நமது கருத்து. எவருடைய புகழ்ச்சியையும், இகழ்ச்சியையும் நாம் பொருட்படுத்தப் போவதில்லை. பொதுஜன வாழ்க்கையில் இவைகளெல்லாம் சகஜந்தான். நமது சேவையெல்லாம், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், பிராமணரல்லாதாருக்குமே. நாட்டாரின் அன்பும், அபிமானமும் இன்னும் அதிகமாக ஏற்படுமேயாகில், பாரத அன்னைக்கென எவ்வித சேவையையும் செய்யத்தயாராயிருக்கின்றோம். நம்மை அபிமானித்து எழுதிய அன்பர்களுக்கு நமது வந்தனம் உரியதாகுக.

இந்தமத பரிபாலன மசோதா.

இந்துமத பரிபாலனமசோதா செப்டம்பர் மீ -17-ந் தேதி சென்னைசட்டசபையில் சட்டமாக்கப்பட்ட விஷயத்தை அறிவிக்கப் பெரிதும் சந்தோஷிக்கிறோம். இதற்கு ஆதரவாக 36 அங்கத்தவர்களும், விரோதமாக 12-அங்கத்தவர்களும் ஓட் செய்தனர். இம்மசோதாவுக்கு விரோதமாக வோட்கொடுத்தவர்களைப்பற்றி நாம் ஒன்றும் கூற முன்வரவில்லை. ஆனால் இதனைத் தைரியத்துடன் சட்டசபைக்குக் கொண்டுவந்து, இது விஷயமாக இருபது நாட்களாய் நடைபெற்ற விவாதத்தில் கொண்டுவரப்பட்ட 500 திருத்தப் பிரேரேபனைகளுக்கும், ஜவாப் கொடுத்து சட்டமாக்கிய கனம். பனகல் அரசரையும், ஆதரவாக வோட்கொடுத்தவர்களையும் வாயார, மனதார வாழ்த்தாமலிருக்கவு முடியவில்லை.

இத்தகைய மசோதா, நம் நாட்டிற்கு எவ்வளவு அவசியமானதென்பதை அறிஞர் யாவரும் ஒப்புகொள்ளுவார்கள். மடங்களை நம்பி வயிறு வளர்க்கும் பதர்கள் தவிர, மற்றும் யாவரும் இம்மசோதா சட்டமாக்கப் படவேண்டுமென்பதையே எதிர்

நோக்கியிருந்தனர். இனி, மடங்களும், அறநிலையச் சொத்துக்களும் நல்வழியில்-நியாயமான முறையில் செலவழிக்கப்படுமென எவரும் நம்பலாம். இம்மசோதா இங்கு இவ்வளவு வெற்றியுடன் சட்டமாக்கப்பட்டிருப்பதால், கனம் வைசிராய் அவர்களும் எவ்வித எதிர் நோக்குமின்றி அங்கீகாரம் கொடுத்திடுவாரென்பதே எமது நம்பிக்கை. தமது கடமை என்னவென்பதை நன்குணர்ந்து, நம்நாட்டிற்கு நன்மைகள் பலவற்றைச் செய்து வரும், கனம் பனகல் அரசர், இம்மசோதாவால் இந்து சமயத்தைப் புனிதப்படுத்தவும் முன் வந்த செய்கையைக் கண்டு எவரும் அவரைப் புகழாமலிருக்க முடியாது. இஃது சட்டமாக்கப்பட வோட்டுக்கு விடப்படுமுன், நமது பிரதம மந்திரியார், "நான் என் கடமையைச் செய்து விட்டேன்; மக்கள் என்னைக் கண்டிக்கட்டும். அவர்களுடைய அறிவுக்கும், மனதுக்கும் தக்கபடி அவர்கள் செய்கிறார்கள். அவர்களை மகிழ்விப்பது எனது கடமையல்ல; உலகம் அகண்டுள்ளது; காலமோ குறுகுகிறது; என்னுடன் ஒத்துப் போகிறவர்கள் சிலரிருக்கலாம். இந்த திருப்தி கொண்டு நான் பெரிதும் இன்புறுகிறேன்" எனக்கூறியுள்ளார். இதினின்றும் அவருடைய அகத் தூய்மையின் போக்கை எளிதிலுணரலாம். எவ்வாற்றானும், மசோதா நிறைவேறினமை நாட்டின் அதிர்ஷ்டமேயாகும்,

---

காந்தியடிகள்.

எம் பெருமான் காந்தியடிகள் சபர்மதி ஆஸ்ரமத்தை மேல் பார்த்துக்கொண்டு, "யங்இந்தியா" மூலமாகத் தேச சேவை செய்து வருகிறார். நாடு இப்போதுள்ள நிலைமையில், மீண்டும் தலைமை வகித்து இந்தியரை நடத்த வேண்டுமென விண்ணப்பஞ்செய்து பல தேசத்தலைவர்கள் கேட்டுக் கொண்டனர். இவ்விண்ணப்பத்திற்குப்பதிலாக, மகாத்மா தாம் படித்தவர்களை நம்பி மோசம் போய் விட்டதாகவும், தலைமையைத் தாம் விரும்பவில்லை யென்றும் கூறி மறுத்து விட்டார். ஒத்துழையாமையின் மூலமாக இந்தியாவுக்குப் புத்துணர்ச்சியை அளித்து ஓர் நூதன சகாப்தத்தை உண்டாக்கிய இப்பெரியார், இப்போது இங்ஙனம் கூறிய போதிலும், காலக்கிரமத்தில் மீண்டும் தலைவராக வந்து நாட்டை முன்னுக்குக் கொண்டு வருவாரென எண்ணுகிறோம். உலகசிரேஷ்டர் வாழ்க.

முதலியார் வாழ்க.

கோயமுத்தூர் நகரபரிபாலன சபை சேர்மனும், கோயமுத்தூர் ஜில்லா போர்டு பிரசிடெண்டும், சத்தியம்

அன்பு, தயை, இரக்கம், பொறுமை என்னும் பஞ்ச இலக்ஷணங்கட்கு உறை விடமானவரும், பிராமணரல்லாத சமூகத்தின் திலகமுமாகிய ஸ்ரீமான். சி. எஸ். இரத்தினசபாபதி முதலியாரவர்களை தமிழுலகமும், இந்தியாவும், அதன் மக்களும் நன்கறிவர். சமீபத்தில் நடைபெற்ற ஜில்லாபோர்டு பிரசிடெண்டு தேர்தலில் நம் முதலியார், பெரும்பான்மையான வோட்டுகளைப் பெற்று வெற்றியடைந்தனர். இதிலிருந்தே இவருடைய பொதுஜன சேவையும் சீரிய தியாகமும் எத்தகையது என்பதை யாவரும் அறியலாம். இவர் சட்டசபைத் தேர்தலிலும் வெற்றி பெறுவாரென்பதே எமது நம்பிக்கை. கருணையங்கடவுள் இவரை நீடுழி ஆசீர்வதிக்குமாறு இறைஞ்சுகின்றோம்.

அடுத்துவரும் மகாநாடு

இம்மாதக்கடைசிக்குள்ளாக கும்பகோணத்தில், ஜில்லா அரசியல் மகாநாடு நடைபெறுமென அறிகின்றோம். இதற்கு சாத்தூர் ஸ்ரீமான். சுப்பிரமணிய நாயனுரையாவது அல்லது கோயில்பட்டி ஸ்ரீமான். வி. ஓ. சிதம்பரபிள்ளையையாவது தெரிந்தெடுக்குமாறு தாலூகா காங்கிரஸ் கமிட்டிகளைக் கேட்டுக் கொள்ளுகிறோம். இந்நாட்டிற்குக் களங்கமற்ற தியாகம் செய்து, பொதுஜனசேவை மேற்கொண்டவர்கள் சிலருடைய வரிசையில் இவர்களிருவரும் சேர்ந்தவர்கள். இவர்களைக் கௌரவிக்க நம்மவர் கடமைப்பட்டுமிருக்கின்றனர்.

மிஸ். W. பிலிப்ஸ்மித்.

தலைப்பில் காட்டியுள்ள பெயர் கொண்ட வெள்ளைக்காரி கோயமுத்தூர் ஜில்லா கல்வியிலாகாவில், பெண் பாடசாலைகளின் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டராய் இருப்பதாகவும், இவர் பரீக்ஷைக்கு வரும்போது, பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்களையும், பள்ளிமாணவிகளையும் அதட்டியும், மிரட்டியும் பயப்படுத்துவதாயும், சரியானபடி தமிழ் தெரியாததால் இருபத்தைந்து என்பதற்கு இருபது ஐந்து என்றும், இன்னும் சில தமிழ் பதங்களைச் சரியாய் உச்சரிக்கவோ, எழுதவோ தெரியாது திண்டாடுவதாகவும், சில உபாத்தியாயினிகளை இரண்டொரு காரணங்களைக்கொண்டு சிநேகிதிகளாகக் கொண்டும், அன்னவர்களைப் புகழ்ந்தும், மற்றவர்களை இகழ்ந்தும், மற்றும் முறையுடன் பேசத் தெரியாமல் "அவள்", "இவள்", எனத் தன் கூலிக்காரியைப்போல் கூப்பிடுவதாகவும், மற்றும் பிக்னிக் என்றும்,

அங்கே போகவேண்டும்; இங்கே போகவேண்டும், என்றும் சர்க்குலர் போட்டு இதற்கு வராதவர்களைப் பற்றிக் கோபித்து, இடைஞ்சல் செய்வதாகவும், இன்னும் பல விஷயங்களைப் பற்றியும் இரண்டொருவரிடமிருந்து நமக்குத் தகவல்கள் வந்திருக்கின்றன. தமிழ் பாஷையே நிறைந்த இந்த பாகததில், தமிழ் பெண்மணிகளின் பழக்கவழக்கங்கள், தமிழ் பாஷை, முதலியன கிஞ்சிற்றும் அறியாத அந்நிய தேயத்து ஸ்திரீ பரீக்ஷாதிகாரியாயிருப்பது பற்றி நாம் வருந்தாமலிருக்க முடியவில்லை. தமிழ் நாட்டுப் பெண்மணிகளில் அநேகர் பி. ஏ. வாசித்துச் சிறந்த அறிவாளிகளாயிருக்கும்போது, அப்பேர்ப்பட்டவர்களை நியமியாது, மிஸ். பிலிப்ஸ்மித் மிஸ். குர்வில்லாபோன்ற பெண்களை தமிழ் பாடசாலைகளுக்கு நியமித்தது மிகவும் வெறுக்கத் தக்கதாகும். இவர்களுக்குத் தமிழ் தெரியாது; இப்பேர்ப்பட்டவர்கள் எப்படி பரீக்ஷை செய்கின்றனரோ பகவான் தான் அறிவார். மேலும், இப்பரீக்ஷாதிகாரி, தானும் சர்க்காரில் சேவகம் செய்பவள்தான், உபாத்திமார்களும் சேவகம் செய்பவர்கள்தான், ஆனால் பதவி மாத்திரம் கொஞ்சம் வித்தியாசமென்பதை மறந்து, கேவலம் அடிமைகளைப்போல் கூப்பிடுவதும், நடத்துவதும் கண்டிக்கத்தக்கது. பெரிய குலத்தையும், யோக்கியமான குடும்பத்தையும் சேர்ந்த அநேகர் உபாத்தியாயினிகளாக இருக்கின்றனர். இவர்கள் இத்தகைய அதிகாரியின் நடத்தையைக் கண்டு மனம் வெதும்புவதை நாமறிவோம். விசேஷமாக ஈரோட்டுக்கு பரீக்ஷை செய்ய வந்திருக்கும்போது நடந்த சகலமும் நாமறிவோம். ஷை தகவல்களை விபரமாக நமது பத்திரிகையில் அடுத்த மாதம் பிரசுரித்து, நமது அபிப்பிராயத்தையும் விவரமாக எழுதி, மேலதிகாரிகளுக்கும் தெரிவிக்க எண்ணியிருக்கிறோம். உபாத்திமார்களும், இப்பேர்ப்பட்ட பரீக்ஷாதிகாரிகளின் பூச்சாண்டிகளுக்குப் பயப்படாமல் மனச்சாக்ஷி வழிநின்று வேலை செய்தல் அவசியம். வேண்டுமென்றே தங்கள்மீது குற்றம் சுமத்தப்படின், மேலதிகாரிகளுக்கு முறையே விண்ணப்பம் செய்து கடவுளிடமும் முறையிட வேண்டும். நாமும் நம்மால் இயன்றவரை இவ்விஷயத்தில் உழைத்து பார்க்கத்தீர்மானித்திருக்கிறோம். கருணையும், நியாயமுமுள்ளவர் கடவுளேயன்றி, மனிதரல்லவே.; ஆகையால் ஏழைகளுக்கிரங்கும் கடவுள் உங்கட்கு நல்ல சகாயத்தை அருளுவார்.

நல்வரவாகுக.

தென் ஆப்பிரிக்கா பிரதிநிதிகள் சில தினங்களுக்கு முன்னால் இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கின்றனர். இவர்களின்

தலைவர் மிஸ்டர். பீயர்ஸ் என்பவராகும். இவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் நன்கு உபசரிக்கப்பட்டுள்ளார்கள். இப்பிரதிநிதிகள் இவண் விஜயம் செய்திருப்பதின் நோக்கமெல்லாம், பொது ஜனங்களின் மனோபாவத்தை அறிவதற்கேயாகும். சில இடங்களில் மிஸ்டர் பீயர்ஸ் பேசும் பொழுது, தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களைக் குறைவுபடுத்தக்கூடிய விதமாக எக்காரியமும் நடைபெறாது எனக் கூறியிருக்கின்றனர். இக்கூட்டத்தார் இந்தியா கவர்ன்மெண்டின் விருந்தாளிகளாக வந்திருந்தபோதிலும், பல பெரியோர்களையும் தனிப்பட கண்டுபேசி வருகின்றனர். வரப்போகும் டிசம்பரில் கேப்டவுனில் நடைபெறும் ராஜி மகாநாட்டில், இப்பிரதிநிதிகள் நல்ல ஆலோசனை கொடுப்பார்களென நம்புகிறோம். இதற்குமுன்னதாகவே வேண்டுவன சேகரிக்கும் பொருட்டு, ஸ்ரீமான் ஆண்டுரூஸ் தென்னாப்பிரிக்காவிற்குச் செல்லுகின்றனர். எவ்விதத்திலேனும் தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் கௌரவம் காக்கப்படவேண்டியதே யாவருடைய நோக்கமாகும்.

நாடார்குல அபேக்ஷகர்கள்.

வரப்போகும் சட்டசபைத் தேர்தலுக்கு, இராமனாதபுரம் ஜில்லா மகமதியரல்லாத தொகுதிக்கு ஸ்ரீமான் சிதம்பரநாடார் பி. ஏ. பி. எல். அவர்களும், திருநெல்வேலிஜில்லா கிராமாந்தர தொகுதியில் மகமதியரல்லாத ஸ்தானங்களுக்கு ஸ்ரீமான் துரைசாமி நாடார் அவர்களும், திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களின் கிறிஸ்தவ தொகுதிக்கு ஸ்ரீமான். தானியேல் தாமஸ் பீ. ஏ. அவர்களும் நாடார் குலத்தவர்களில் அபேக்ஷகர்களாக நிற்கின்றனர். இவர்கள் யாவரும் சிறந்த யோக்யதையுடையவர்கள். ஒவ்வொருவரும் உயர்ந்தகல்வியும், பரந்த நோக்கமுமுடைய பெரியோர்கள். பொதுவாக தேசத்திற்கும், சிறப்பாகத் தம் குலாபிவிருத்திக்கும் திரிகரண சுத்தியுடன் உழைப்பவர்களெனக் கூறுவதை எவரும் மறுக்கமுடியாது இத்தகைய கனவான்கள் சட்டசபைக்குச் செல்லுவதால் ஏற்படக்கூடிய நன்மைகள் அனந்தம். இவர்களை ஆங்காங்குள்ள வோட்டர்கள் தெரிந்தெடுத்து, சட்டசபைக்கு அனுப்ப பன்முறையும் வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஓர் விண்ணப்பம்

ஆனந்த விஜயன் மே மீ-த்திலிருந்து ஆகஸ்டு மீ வரை அனுப்பப்படவில்லையாதலால், நாம் இவற்றிற்கெல்லாம் சேர்த்து இச்சஞ்சிகையை அனுப்பியிருக்கிறோம். இதனையும் ஏற்கெனவே அனுப்ப எண்ணியும், போஸ்டு மாஸ்டர் ஜெனரலவர்கள் உத்திரவுக்காக எதிர்பார்த்து சிறிது பிந்திவிட்டது. இனிகாலந் தாழ்த்தாது மீ-ந்தோறும் 1-ந் தேதி அனுப்பிடுவோம்.

இதற்கு வருட சந்தா 1—8—0 என ஏற்படுத்தியிருப்பது வெகு சொற்பமேயாகும். மீ-2 அணா ஆகிறது. எத்தனையோவிதமான அனுவசியச் செலவுகள் நமது ஜீவிய காலத்தில் ஏற்பட்டுவிடுகின்றன. அவைகளைப் பற்றிநாம் கவலை கொள்ளுவதுமில்லை. ஓர் உயரிய சஞ்சிகைக்கோ மீ-2 அணா வீதம் ஒருவருடத்திற்கு 1—8—0 ரூபாய்கொடுப்பது எவ்வளவோ பிரயோஜனத்தைத் தரக்கூடியதென்பது அறிஞர் ஒப்புக்கொள்ளத் தக்கதாகும். இத்தொகையை நேயர்கள் மணியார்டர் மூலமாக அக்டோபர் மாதம் 15-ந் தேதிக்குள் அனுப்பிவிடுமாறு விண்ணப்பிக்கிறோம். இதனால் மணியார்டர் கமிஷன் 2 அணா மட்டுமே ஆகிறது. இப்படியின்றி வி. பி. மூலமானால் அதிகமாக 3 அணா செலவு நேரிடுகிறது. இதனால் நமக்கும், நேயர்களுக்கும் மிகுந்த சிரமமே யொழியவேறல்ல. அக்டோபர் 15–தேதிக்குள் மணியார்டர் அனுப்பாத நேயர்களுக்கு, வி. பி. பி. அனுப்பப்படும். மற்றும், ஆனந்த விஜயனுக்கு, இவ்வருடத்திய சந்தாதொகை கொடுத்துள்ளவர்கள் அதிகப்படியான 0—8—0 வையும் அனுப்புமாறு ஞாபக மூட்டுகிறோம். இவையாவும் தங்கள் கடமைகளில் இது ஒன்ருக எண்ணி, தாங்கள் சந்தாதாரராகச்சேர்ந்தும், தம் சிநேகிதர்களையும் சந்தாதாரராகச் சேரும்படிசெய்தும் நன்மைபுரிவார்களாக. மற்றும் போஷகர்களாய்ச் சேரத்தகுதியுடையோரும் இப்பத்திரிகை மீது அன்புபாராட்டி போஷகர்களாவீர்களாயின் தமிழுலகம் உங்களையும் போற்றுமென்பதில் ஐயமில்லை.

மேலும் இம்மாசிகை பலருக்கும் மாதிரியாக அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்களிடமிருந்து இம் மீ 15-ந் தேதிக்குள் பதில் வாராவிடின், அவர்களையும் சந்தாதாரராகச் சேர்த்து வி. பி. அனுப்பப்படும். வெளிநாட்டு நேயர்கள், முன் பணம் அனுப்பவேண்டும். அன்பர்கள் இவ்வேண்டுகோளை நன்கு கவனிப்பார்களாக.

ஆனந்த விஜயன்.

பரிசு நெம்பர்—1

இம்மாத முதற்கொண்டு "ஆனந்த விஜயன்" பரிசு என ஒன்று கொடுக்க முற்படலானோம். இப்பரிசிற்கென்றுள்ள போட்டியில், இப்பத்திரிகையின் சந்தா நேயர்களே பங்கெடுத்துக் கொள்ளவேண்டும்;

கீழ்கண்ட வாக்கியங்களை நேர்பட எழுதி நமக்குக் கிடைக்கும் விடைகளில், முதல்வருக்கே இப்பரிசு அளிக்கப்படும்.

இப்பரிசானது, சுத்தகதர் சால்வை யொன்றாகும்.

பரிசு போட்டியில் சேருபவர், இன்னொரு கடிதத்தில் விடைகளை எழுதி அரைஅணா புக்போஸ்டில் அனுப்பிவிடலாம், விடைகள் ஒவ்வொரு மீ 25-ந் தேதிக்குள் அனுப்பிவிடவும். பத்திராசிரியரின் தீர்ப்பே முடிவானது.

நேர்பட எழுதப்பட வேண்டிய வாக்கியங்கள்.

1. ஜெவிர்கம்யசன்ய மல்விர்.
2. தியத்சதித் கீர்தா மோஸ்ஹன.
3. இரயாம்ண மாராம்பக.
4. மான்வதட டார்க்யர்நா.
5. பக்அஷார்.
6. கதா செமங்ரைக்ன்ணண்.

(கீழ்கண்ட பிரகாரம் நம்பர் கொடுத்து எழுதுக.)

விடை.

1..

2..

3..

4..

5..

6..

கையொப்பம்.

விலாசம்..

....

....

விடைகள் அனுப்பப்படவேண்டிய விலாசம்,

பத்திராசிரியர்

ஆனந்தவிஜயன் காரியாலயம், ஈரோடு.

இந்தியத் தொழில்களை ஆதரியுங்கள் அன்பரே!

கத்தர்

சந்ததமும் கதரை கட்டுங்கள் நண்பரே!

தீபாவளி சமீபித்துவிட்டது.

அடுத்துவரும் தீபாவளி பண்டிகையன்று ஒவ்வொருவரும் அவசியம் கதர் துணியையே வாங்கி அணிந்து இன்புற வேண்டுமென்பதே எமது ஆவல். இதனை முன்னிட்டே, நமது சந்தா நேயர்களுக்கும், அபிமானிகளுக்கும், மற்றும் நண்பர்களுக்கும் இது விஷயத்தில் உதவிபுரியவராமென எண்ணி முன் வரலானோம்.

கத்தர் துணியில், எந்த ரகம் வேண்டுமானாலும், தேவையுள்ளவர்கள் எமது காரியாலயத்திற்கு, முன்பணத்துடன் ஆர்டர் செய்வார்களாயின், அவரவர்கள் மனதுக்குத் திருப்தியுண்டாகக்கூடிய வண்ணம், நல்ல தினுசுகளை அனுப்பிவைக்கத் தயாராயிருக்கிறோம். மற்ற விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்:—
ஆனந்தவிஜயன், காரியாலயம்,
ஈரோடு. (தென்னிந்தியா.)

சுகஜீவி பில்ஸ்.

கவலைகள் ஒழிந்தன! வியாதிகள் தொலைந்தன!

இம்மாத்திரை சரீரத்திலுள்ள 120 வியாதிகளைக் கண்டிக்கக்கூடியது. சுகஜீவி பில்லை வாங்கி உபயோகித்தவர்கள், எங்கள் வேண்டுகோளின்றியே நூற்றுக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் அளித்திருக்கின்றனர். இந் நோய் என்று தொலையுமென ஏக்கங் கொண்டோர்க்கு, அருந் தோழன் நமது மாத்திரைகளேயாகும். உடனே எழுதுக.

2 புட்டி விலை ரூ. 1—0—0. வி. பி. 0—7—0

வெளிநாடுகளிலுள்ளோர் முன் பணமே அனுப்பவேண்டும்.

நற்சாக்ஷிப் பத்திரங்கள்.

ஈரோடு, எஸ். தேவசகாயம் கம்பெனியாரிடமிருந்து, எஸ். டி. ஈ. சுகஜீவிபில்ஸ், கோரோஜனை பில்ஸ், ஆகிய இரண்டும் வரப்பெற்று உபயோகித்தோம். ஆச்சரிமான குணத்தைக்கொடுக்கிறது. இவைகளை குடும்ப அவுடதமென்றே கூறலாம், யாவரும் இதனை வாங்கி உபயோகிப்பார்களாக. ச. தாமஸ்பாலையா பிள்ளை, ஈரோடு.

விலாசம்:— எஸ். தேவசகாயம்,
ஆர். வி. ஸ்டிரீட், ஈரோடு.

சிறந்த வைத்தியம்.

ஈரோட்டில், மண்டபவீதியில், பாலக்காட்டிலிருந்து வந்து குடியிருக்கும், ஸ்ரீ சங்கர்ஷண ராமாநுஜ தாசன் என்னும், வைத்தியர், மூலிகைகளைக் கொண்டு சிறந்த மாதிரியில் வைத்தியம் செய்கிறார். வியாதியஸ்தர்கள் தங்கள் வியாதி விபரங்களை எழுதினால் மருந்துகள் வி. பி. மூலமாக அனுப்பப்படும். நேரில் பார்க்கின்றவர்களும் பார்க்கலாம்.

ஈரோடு சங்கர்ஷண ராமாநுஜதாஸன் வைத்தியர்.

இரண்டு இரத்தினங்கள்.

இப்பிரபஞ்சத்தின் கண் உண்டாகும் நோய்கள் யாவற்றினும் கொடியது, இரத்தமின்மை. இரத்தவிருத்தியும், சுத்தஇரத்த ஓட்டமுமிருப்பின் எப்பேர்ப்பட்ட வியாதியும் மனிதனை அணுகப் பயப்படும். இதற்கென்றே அநேகர் பலவித மருந்துகளை வெளியிடுகின்றார்களெனினும், அவைகளில் பல, சுகத்தைக்கொடாது அதிக வியாதிகளை உற்பத்தி செய்துவிடுகின்றன. எனவே உலகோபகாரமாக, ஏழைமுதல் பணக்காரர்வரையிலும் திட சரீரர்களாயிருக்கவும், இல்லற இன்பத்தை அநுபவிக்கவும், மற்றும் மறதி, அசதி, சோம்பல், இடுப்புவலி, இவைகளை நீக்கி, போகசக்தி, வீரிய விர்த்தி முதலியவைகளை அருளவும் சாதனமாயிருக்கக் கூடிய விதமாக, நமது வைத்திய சாலையில் மகான். ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீதரசுவாமிகள் செய்முறைதவறாது

மதன கோலாகல ரசமணி மாத்திரை

யைச் செய்து வருகிறார். இது உயரிய சிரேஷ்டமான ஔடதம். மனிதர் தம் துன்பம் தீரவெளிவந்துள்ளது இதுவே. இதன் விலை. குளிகை 50 க்கு ரூ 4. 25 குளிகை ரூ 2.

இக்காலத்தில் பலர், முன் பின் பாராது போக இச்சையிலாழ்ந்து தம் சரீரத்தைக் கெடுத்துக் கொள்ளுகின்றனர். இதன்பயனாக வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, ரணம், அரையாப்பு, அண்டவாதம், கை கால் கருப்பு, கிரந்தி, தடிப்புகள், திமிர் முதலிய கொடிய வியாதிகளால் கஷ்டப்படுகின்றனர். இவற்றிற்கு 3 நோத்தில் குணங்கிடைக்கக் கூடிய விதமாக, மேல்படி சுவாமிகளே.

பிரமேகதுல சம்ஹாரி

என்னும் அரியமருந்தைச் செய்து வருகிறார்கள். இதைச் சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகளை அநுபவித்தவரே கூறுவர். இதன் விலை புட்டி 1 க்கு ரூ 2. வி. பி, சார்ஜ் பிரத்தியேகம், ஏஜண்டுகள் எங்கும் தேவை.

நற்சாக்ஷி

எனது நண்பர் ஒருவர் உசிலம்பட்டியில்' இரத்தமின்றி, தேகம் வெளுத்து அதிக அவஸ்தைப்பட்டார். அஜீர்ணம் நித்திரையின்மை போன்றனவால் மிகுதியும் கஷ்டப்பட்டார். திருச்செங்கோடு ஸ்ரீ ராமபிரான் வைத்தியசாலையிலிருந்து மதனகோலாகல ரசமணிமாத்திரை சாப்பிட குணங்கிடைத்தது.

உசிலம்பட்டி சுப்பையா நாடார்
8—3—26

எனக்கு வெகுநாட்களாக நீர்க்கடுப்பு, தேக மெங்கும் தடிப்பு முதலியன இருந்தது. எத்தனையோ வைத்தியர்கள் பார்த்தும் குணமடையவில்லை. பின்னர், திருச்செங்கோடு ஸ்ரீ ராமபிரான் வைத்தியசாலையிலிருந்து பிரமேகதுல சம்ஹாரி மாத்திரை வாங்கி உபயோகிக்கக்குணம் கிடைத்தது.

இரங்கூன் R. S. ......
5–7–26

விலாசம்:— ஸ்ரீராமபிரான் வைத்தியசாலை, திருச்செங்கோடு.

நற்குணம்நிறைந்த
அற்புத மருந்து

ராஜமதனு

விற்பனர், பலர்புகழ்
சற்குண விருந்து

"ராஜமதனு" என்னும் இவ்வற்புத மருந்தானது, சமீபத்தில் தான் உலோகோபகாரமாக வெளியிடப்பட்டது. இஃது தென்னிந்தியாவின் பிரசித்த பெற்ற ஜமீனாகிய வீரகேரளம் புதூரை அரசாண்ட, ஸ்ரீமான் நவநீத கிருஷ்ண பாண்டியன் அவர்கள் காலத்தில், அன்னாருக்கு வைத்தியராகயிருந்த ஸ்ரீமான் விக்ரமாதித்தன் பிள்ளை (இப்பால் வேதநாயகம் பிள்ளை) அவர்களால் கண்டு பிடிக்கப்பட்டு, ஏட்டுப்பிரதியாக இருந்ததை சமீபத்தில் எம்மவர் ஒருவர் எமக்கீந்தனர், இதைச் செய்து அநேகருக்குப் பரீக்ஷார்த்தமாகக் கொடுக்க அவர்கள் யாவரும் இதன் அருமையை வியந்து கொண்டாடினர். இம்மட்டோ, இதனைச் சொற்ப இலாபத்தில் உலகோபகாரமாக வெளியிட வேண்டுமென்றும் எம்மை வற்புருத்தினர்,

இம்மருந்தைச் செய்ய அதிக சிரமம் வேண்டியிருப்பினும், நமது நாட்டில் எண்ணற்ற மனிதர் நோய் வாய்ப்பட்டுத் தவிப்பதைக் கண்டு, அன்னார்களை நோயென்னும் இன்னலினின்று தப்புவிக்க எண்ணி, இதனை வெளியிடலானோம்.

இதில் விஷ சம்மந்தமான எவ்வித சரக்கும் கிடையாது. இம்மருந்தில் சேர்ந்திருக்கும் 75 வித சரக்குகளில் இருபது மூலிகைகள் சேர்ந்திருக்கின்றன. இம்மூலிகைகள் ஒவ்வொன்றுமே மகா அருமையானவை; கிடைத்தற்கரியவை; இவை பாபவிநாசத்தைச் சேர்ந்த பகுதியில் ஏராளமாகயிருக்கின்றன. எனினும், அவைகளின் நுட்பங்கள் பலருக்குத் தெரியாததால், அதனை அறிந்தோர் ஒருவரினுதவியைக் கொண்டு, செய்முறை தவறாது இதைச் செய்து முடிக்கலானோம். இம்மருந்து பொதுவாகச் சகல ரோகங்களையும் தீர்க்கின்றதெனினும், சிறப்பாக இரத்தமின்றி, தேகம் வெளுத்தல், சோகை, காமாலை, பாண்டு, நெஞ்சுவலி, தூக்கமின்மை, உன்மத்தம், கோடிய வாய்வு, ரோகங்கள், பசியின்மை, ஏங்கல், தாதுவிர்த்தியின்மை, அசாத்திய கை கால் இடுப்பு உளைச்சல், க்ஷயம், காசம் போன்ற கஷ்டமான வியாதிகளை அறவே நிவர்த்தி செய்கின்றது. ஷை வியாதிகளுக்காக மருந்து சாப்பிட்டு நம்பிக்கை இல்லை என திகைக்கின்றவர்களுக்கு அபயஸ்தம் அளிக்கும் பொருட்டே இம் மருந்தை வெளியிட்டிருக்கின்றோம். மருந்துடன் உள்ள விபரப்படி சாப்பிடுவோர் 5-ம் நாளே திவ்யமான ஆரோக்யமடைவதை அனுபவத்தில் காணலாம்.

பரீக்ஷைக்காக ஒரு முறையேனும் தருவித்துப்பாருங்கள்

இதன் விலை புட்டி 1-க்கு ரூ 2—0—0

(தபாற்கூலி பிரத்தியேகம்)

பினாங்கு, சிங்கப்பூர், மோரீஸ், நெட்டால், சுமத்ரா, போன்ற வெளிநாடுகளிலுள்ளோர் தபாற்கூலியுட்பட முன்பணமனுப்பவேண்டும்.

விலாசம்:—மானேஜர்
ராஜாமிர்தம் டிபோ
ஈரோடு.

கவனியுங்கள் **ராஜாமிர்தம்** வாசியுங்கள்

(இது ஓர் சிரேஷ்டமான குடும்ப ஔஷதம்)

அருமை மிக்க நண்பர்காள்!

இவ்வுயர்ந்த மருந்தை் கலியுக வரப்ரசாதன் என்றே சொல்லவேண்டும். இனி என் செய்வோம்; வேறுதிக்கில்லையே; எத்தனையோ அவுடதங்களைப் பிரயோகித்தும் குணத்தைக்காணேமே; என அல்லலுறும் குடும்பங்களுக்கும், நேயர்களுக்கும் தைரியமூட்ட, இதோ, ரோகங்களின் வைரியாகிய ராஜீாமிர்தம் வெளியாகியிருக்கின்றது. டாக்டர்கள் மெச்சுகின்றனர்; அன்பர்கள் பலர் இன்புருகின்றனர்; எதினுல்? ராஜாமிர்தத்தின் அரிய குண விசேடத்தால்! இந்த ராஜ அவுஷதம் தீர்க்காத நோயே இல்லை. இதில் சேர்ந்திருப்பன அனைத்தும் உப்புச்சரக்குகளாகும். விஷசம்மந்தமே கிடையாது. வியாதியுள்ளோர் அநுபானப்படி உட்கொள்ள அடுத்த நேரமே குணங்கண்டு, உளம் மகிழ்ந்து, ஆனந்தக் கடலில் மூழ்கி பேருவகை பூத்து, குணமடைவதைக் காணலாம்.

ராஜாமிர்தம் ஆபத்துக் காலங்களில் அமிர்த சஞ்சீவி; நோயுற்றோருக்கு தேவாமிர்தம்; கைவிடப்பட்டோர்க்கு கலங்கரை விளக்கு; சுகமுள்ளோர்க்குச் சுகத்தைக் காக்கும் அரிய பொக்கிஷம்; சுருக்கிக் கூறின் மருந்துகள் யாவற்றிலும் இவ்வொன்றே சகல சிரேஷ்ட குணங்களையுமுடைய குடும்ப ஔஷதம்; ஒவ்வொருவர் வீட்டிலும் தவருது இருக்கவேண்டிய சர்வரோக நிவாரணி.

ராஜாமிர்தம் உள்ளுக்கும் சாப்பிடக்கூடியது; வெளியிலும் பிரயோகிக்கத்தக்கது. சகலவித காய்ச்சல்கள், சகலவித வாய்வுகள், இருமல், தீராத மார்வுவலி, நெஞ்சுப்புண், குடல் சம்மந்தமான எல்லாநோய்கள், குன்மம் வயிற்றுவலி, பித்தம், புளியேப்பம், அஜீர்ணம், மலச்சிக்கல், உப்பிசம், குமட்டல், வாந்தி, காலரா, பிளேக், ஜன்னிகள் சிரசுசம்மந்தமான வியாதிகள், தோல்சம்மந்தமானபுண், சிரங்கு, நரம்புச்சிலந்தி, அரையாப்பு, வீக்கம், முடக்குவாதம், இடுப்புவலி, படர், எச்சல்தழும்பு. போன்ற நூற்றுக்கணக்கான வியாதிகள், தேள்க்கடி, பாம்புக்கடி, செய்யாண், பூரான், கடிகள் போன்ற ஆயிரக்கணக்கான நோய்களை தும்சம் செய்து விடும் மருந்தும் இந்த ராஜாமிர்தமே.

ராஜாமிர்தம் இவ்வளவு அரிய-மேன்மையான சக்திகளைக் கொண்டிருந்தும் இதன் விலையை, ஏழைகள் முதல் பணக்காரர் வரை சமமாக வாங்கி அனுபவித்து சுகமடைவான் வேண்டி வெகு சொற்பவிலையே வைத்திருக்கின்றோம்.

ராஜாமிர்தம் புட்டி ஒன்றுக்கு விலை ரூ 1—8—0

(தபாற் சார்ஜ்பிரத்தியேகம்)

மலேயாநாடுகளாகிய பினங்கு சிங்கப்பூர் கோலாலம்பூர், மற்றும் வெளிநாடுகளாகிய டர்பன். மோரீஸ், நெட்டால், சைகோன் சுமத்ரா, முதலிய பல பிரதேசங்களிலுள்ளவர்கள் முன்பணமனுப்பியே மருந்து பெற்றுக்கொள்ளவேண்டும். எங்கும் ஏஜண்டுகள்தேவை. தக்கசம்பளம் அல்லது கமிஷன் கொடுக்கப்படும். விபரத்துக்கு மானேஜருக்கு எழுதிக்கொள்க

விலாசம்:— மானேஜர், ராஜாமிர்தம் டிபோ, ஈரோடு.

இப்பத்திரிகை ஈரோடு டைமண்ட் பிரஸில் பதிப்பிக்கப்பட்டு
ச. தா. பாலையா பிள்ளையால் வெளியிடப்பட்டது.